பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 30 வியாழக்கிழமை 13.04.2023 கதிர் 154

# தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாக்க ஏப். 16 உணவு தவிர்ப்புப் போராட்டம்

## அடையாளமாக ஒரு நாள் நடத்த அனைவருக்கும் அழைப்பு

(நிதர்சன்)

தமிழர் எம் மரபுரிமைகள் பாதுகாப்போம் என்ற தலைப்பில் சைவத் தொண்மை அடையாளங்களை, வழிபாட்டிடங்களை அழிக்கும் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளை நிறுத்தவும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஏப்ரல் 16 யாழ்ப்பாணம், நல்லூரில் உள்ள நல்லை ஆதீன முன்றலில் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப் போவதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு என்ற அமைப்பு அறிவித்துள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்தின்போதும் அதைத் தொடர்ந்தும் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படும் என்றும்

☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தலைமைத்துவ ஆளுமை ஊரறிந்த ரகசியம். அரசியலிலும் கட்சியிலும் முன்னோக்கிப் பாய்வதற்குப் பதில் தற்காப்பு, இருப்பைத் தக்கவைக்கும் செயற்பாட்டில்தான் அந்தக் கட்சியின் தலைமை கவனமாக இருக்கின்றது. இது அந்தக் கட்சிக்கு மட்டுமல்ல இனத்திற்கும் பெரும் பாதிப்பாக அமைகின்றது. தலைமை உறுதியான அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்காத நிலையில், சரியான அரசியல் வழித்தடத்தைக் காட் டாத நிலையில் அதன் அடுத்த மட்டத் தலைவர்களும் தொண்டர்களும் அவநம்பிக்கையடைகிறார்கள்.

சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழ்க் கட்சிகளும் பொது அமைப்புக்களும் இணைந்து போராட்டங்களை நடத்துவது தொடர்பாக கடந்த வாரம் வவுனியாவில் இடம்பெற்ற சந்திப்பில் இதனைத் தெளிவாகப் பார்க்க முடிந்திருக்கிறது.

தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு, வெடுக்குநாறி மலையில்

☞ 2

# கடன்மறுசீரமைப்புக்கு சீனா கட்டாயம் உதவும்

## வொஷிங்கடனில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு

* ஏப்ரல் மாத இறுதிக்குள் கடன் மறுசீரமைப்பு நிறைவுறும்
* கடன்களுக்காக இயற்கை வளங்களை பரிமாற்றிக்கொள்ளத் தயார்
* இறையாண்மை முறைகள் பற்றி தெளிவுபடுத்தல் கிடைக்கவில்லை

சீனா பகிரங்கமாக அறிவித்துள்ளமைக்கு அமைவாக, இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டிற்கு கட்டாயமாக உதவும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

☞ 3

### கடன் மறுசீரமைப்புக்கு மாற்றீடாக

## சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கு அழுத்தம் கொடுக்கிறது சீனா

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கான கோரிக்கைக்கு தாமதமான பதிலைக் கொடுத்த சீனா இப்போது கடனைத் திருப்பிச் செலுத்துவதை மறுசீரமைப்பதற்கு உதவுவது என்ற போர்வையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு அழுத்தம் கொடுப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனா -இலங்கை இடையேயான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின்

☞ 3

## மக்களைக் காப்பாற்றிய ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்குவோம்

### ஐ.தே.க. தவிசாளர் வஜிர வேண்டுகோள்



இலங்கை மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஒருதடவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அவரைத் தேசிய சொத்தாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் ஐக்கிய தேசியக்

☞ 3

## சுதந்திர ஊடகங்களை ஒடுக்க அரசு கங்கணம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சீற்றம்



பயங்கரவாத எதிர்ப் புச் சட்டத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக ஊடக அடக்குமுறைக்காக ஒலிபரப்பு அதிகாரச் சட்டமொன்றையும் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம்சாட்டினார்.

இதன் மூலம் சுதந்திர ஊடகங்களை ஒடுக்குவதற்கு அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தகவல் அறியும் உரிமை மற்றும் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான கடுமையான நடவடிக்கையாகும் என்று தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர்,

☞ 3

## மொட்டுக் கட்சியின் ஆட்சி சர்வாதிகார ஆட்சி இல்லை

### ஊடக சுதந்திரம் பறிக்கப்படுவதை ஆதரிக்கோம் என்கிறார் மஹிந்த



மக்களுக்கும் ஊடகங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கமாட்டாது. பொதுஜன பெரமுன ஆட்சி சர்வாதிகார ஆட்சி இல்லை என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வாறு

☞ 3

## புலனாய்வுப் பிரிவினரும் களத்தில்

பண்டிகைக் காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு பொலிஸாருக்கு மேலதிகமாக புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

புத்தாண்டு காலத்தில் சந்தைக்குப் போலியான வர்த்தகர்கள் நுழைகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாவனைக்கு உதவாத மற்றும்

☞ 3

## தென்கொரியா பறக்கிறார் அநுரகுமார



மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாளை தென்கொரியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

☞ 3

## கடன் மறுசீரமைப்பு பேச்சுத் திட்டம் இன்று அறிவிப்பு

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சு செற்றிட்டத்தை யப்பான், இந்தியா, மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடகள் இன்றையதினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளன.

வொஷிங்டனில் நடைபெறும் வசந்தகால கூட்டத்துக்குப்பின்னார் நடைபெறவுள்ள செய்தியாளர் சந்திப்பில் யப்பானிய நிதியமைச்சர் சுனிச்சி சுசுகி, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் பிரான்ஸின் திறைசேரி

☞ 3

## ஊடகச் சுதந்திரத்தை பறிக்க அனுமதியோம்

### சு.க. தலைவர் மைத்திரி திட்டவட்டம்



ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம். என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்து- வதற்குப் புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது என்று நீதி அமைச்சர்

☞ 3

## ஆட்சியிலுள்ள அனைவருமே வெட்கித் தலைகுனியட்டும்

### ஊடகங்களை அடக்கும் சட்டம் குறித்து விமல் இப்படிக் கருத்து




ஊடகங்களை அடக்கி ஒடுக்க இந்த அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தால் ஆட்சியிலுள்ள அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

இவ்வாறு தேசிய

☞ 3

# சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பை இந்திய உதவியோடு தடுக்கலாம்

## நம்பிக்கை வெளியிடுகிறார் வடக்கு முன்னாள் முதலமைச்சர்



இலங்கையில் தமிழர் தாயகப் பரப்பில் நிகழ்ந்து வரும் சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்பை இந்தியாவின் துணையோடு தடுத்த நிறுத்த முடியும் என்று தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

அவர் அவ்வப்போது வெளியிடும் கேள்வி, பதில் வடிவிலான அறிக்கை யில் இதனை அவர் தெரிவித்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கேள்வி: சிங்கள பௌத்தர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மத ஆக்கிரமிப்புக்களில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்தலாமா?

பதில்: கட்டாயமாக முடியும்! இதனை நாங்கள் இந்தியாவின் உதவி கொண்டு நிறைவேற்ற வேண்டும். இன் னமும் இந்தியாவின் ஆளுந்தரப்பாருக்கு இலங்கைத் தமிழர்கள் பற்றியும் சிங்களவர்கள் பற்றியும் தெரியாது. இலங்கைத் தமிழர்கள் 3000 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இந் நாட்டில் இருந்து வருவதை அவர்கள் அறியமாட்டார்கள். அவர்களுள் பலர் இங்குள்ள சிங்கள அரசியல்வாதிகள் போன்று பத்தாம் நூற்றாண்டில் இங்கு வந்த சோழர்களின் வாரிசுகளே இலங்கைத் தமிழர்கள் என்று நினைக்கின்றார்கள். அது தவறு. இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழரே. அவர்களுள் பெரும்பான்மையோர் நாக வழிபாட்டில் ஈடுபட்டு வந்தமையால் நாகர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். (பேராசிரியர் பத்மநாதனின் நாகர்கள் பற்றிய நூல் பார்க்கவும்). காலத்திற்குக் காலம் பாண்டியர்கள், சேரர்கள், பல்லவர்கள், சோழர்கள் என்று பலர் படையெடுத்து வந்த போது அவர்களின் மக்களும் இங்கு குடியேறினார்கள். ஆனால் எமது ஆணிவேராக இருப்பவர்கள் ஆதித் தமிழரே. இவர்கள் குமரிக்கண்ட வாசிகளின் வழித்தோன்றல்கள் என்று கொள்ள இடமிருக்கின்றது.

அடுத்து மகாவம்சத்தை முன்வைத்து அதில் கூறிய விஜயனின் வம்சாவழியினரே சிங்கள மக்கள் என்று பலர் நினைக்கின்றார்கள். இதுவும் தவறே. மகாவம்சம் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் ஒரு புத்த பிக்குவால் பாளி மொழியில் எழுதப்பட்டது. அந்த நூல் பௌத்தத்தைப் பெருமைப்படுத்த எழுதப்பட்டது என்று ஒவ்வொரு செய்யுளின் முடிவிலும் நூலாசிரியரால் கூறப்பட்டுள்ளது. மேலும் அதே நூலில் 'சிங்களம்' என்ற சொல் எங்கணுமே காணப்படவில்லை. அதாவது சிங்களவர் பற்றியோ சிங்கள மொழி பற்றியோ எங்கும் கூறப்படவில்லை. காரணம் சிங்கள மொழி அப்போது பிறக்கவில்லை. அது பிறந்தது கி.பி 6ம் 7ம் நூற்றாண்டுகள் அளவில். தமிழ் மொழியுடன் சேர்ந்து பாளி பேசப்பட்டதால் பிறந்ததே சிங்கள மொழி. இன்று சென்னையில் ஒரு புதிய மொழி உருவாகிக் கொண்டு வருகின்றது. அதன் பெயர் 'தங்லிஷ்'. (தமிழும் ஆங்கிலமும் சேர்ந்து பேசப்படும் போது உருவாவது 'தங்லிஷ்'). அதே போல் தமிழுடன் பாளி பேசப்பட்டதால் சுமார் 1400 வருடங்களுக்கு முன்னர் உருவாகியதே சிங்களம். சிங்களம் இலங்கையின் ஆதி மொழியல்ல.

சிங்களம் ஒரு அபிவிருத்தியடையாத மொழியாகவே இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தது. பேராசிரியர் ஜி.பி.மலலசேகர, இலங்கையின் இந்தியத் தூதுவராக 1950களில் டெல்கி போன பின்னர் தான் சிங்கள மொழி வளர்ச்சி அடைந்தது. ஹிந்தி - ஆங்கிலம், சமஸ்கிருதம் - ஆங்கிலம் போன்ற மொழிபெயர்ப்பு நூல்களை எடுப்பித்து ஆங்கிலத்திற்கு ஒப்பான சிங்களச் சொல்லை ஹிந்தி மொழியில் இருந்தும், சமஸ்கிருத மொழியில் இருந்தும் சிங்களத்தினுள் உட்புகுத்தினர்.

☞ 3

காலைக்கதிர் Kalaikkathir

## மட்டு. போதனா வைத்தியசாலைக்கு
# ரூ. 10 மில். பெறுமதியான மருந்துகள் கனேடியத் தமிழர்களால் அன்பளிப்பு

கனேடியத் தமிழர்கள் 10 மில்லியன் ரூபா பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்குகின்றனர்.

கனேடியத்தமிழ்பேரவை ஆண்டுதோறும் தமிழ் கனேடியர்களின் நிதி சேர் நடை ஊடாகப் பல்வேறு தொண்டுநிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகிறது.

இலங்கையின் மோசமான நிதிச் சரிவால் உயிர் காக்கும்மருந்துகளின்பற்றாக் குறையை நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளும் அதிகளவில் எதிர் கொண்டு வருகின்றன. இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் இந்த ஆண்டு செப்டம்பர் 11 கனேடியத் தமிழர் பேரவையின் 14 ஆவது ஆண்டு தமிழ் கனே டியர் நிதி சேர் நடை ஏற்பாடு செய்யப்பட்டு அதில் திரட்டப்படும் நன்கொடை மூலம்இலங்கையில்வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் மருத்துவப் பொருட்களை வழங்குவது எனத் திட்டமிடப்பட்டது.

இந்த நன்கொடையின் இரண்டாம் கட்டமாக கனேடியத் தமிழர் பேரவையால் ஒழுங்கமைக்கப்பட்ட இரண்டாம்தொகுதிமருந்துப்பொருட்கள் ஏப்ரல் 12 புதன்கிழமை 2:30 மணிக்கு மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்கு கையளிக்கப்படவுள்ளதுஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது. .

# விரும்பியவர்கள் வரலாம்; ஏனையோர் தவிர்க்கலாம்

## தமிழ் எம்.பிக்களின் அரங்கம் குறித்து மனோ வெளிப்படை



தமிழ் நாடாளுமன்ற அரங்கம் மூலமாக தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தொடர்பில் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று நான் கூறவில்லை. உண்மையில்அரசியல்தீர்வு தொடர்பில் நாடாளுமன்ற தமிழ் அரங்கம் பேசக்கூடாது என்றே நான் கூறியுள்ளேன்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஈழத்தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் எனத் தமிழ்பேசும்மக்களின்தேசிய அரசியல் அபிலாஷைகள் களத்துக்குக் களம் மாறுபடுகின்றன. ஆகவே, அவற்றை அந்தந்த மக்களின் ஆணைகளைப் பெற்ற கட்சிகள்தேசிய, சர்வதேசஅரங்கங்களில் பேசட்டும்.

இங்கே, நாடெங்கும், வடக்கு, கிழக்கு, கொழும்பு உட்பட மேல், மத்திய, சப்ரகமுவ, ஊவா, தெற்கு மாகாணங்களில் வாழும் தமிழர் எதிர்கொள்ளும்சமகாலபொது நெருக்கடிகள் தொடர்பில் சிங்கள அரசியல் கட்சிகள், சிங்கள சமூக கலாசார மத நிறுவனங்கள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றுடன் இந்த அரங்கம் பேச வேண்டும் என்றே கூறியுள்ளேன்.

முதற்கட்டமாக இப்போது ஒருசிலகட்சிகள்பிறகுஏனைய தமிழ்க்கட்சிகள், முஸ்லிம்கட்சிகள் என அனைவரையும் இணக்கப்பாட்டுடன் அரவணைக்கவே விரும்புகின்றேன்.

முற்போக்கான சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களை அரங்கத்துக்குப் பார்வையாளர்களாகக் கூட அழைக்கலாம் எனக் கூறியுள்ளேன்.

இவை அனைத்தும் எனது கருத்துக்கள்தான். இவை அனைவராலும் ஏற்கப்படவேண்டும்என்றில்லை.

அதேவேளை, ஏற்கனவே கொழும்பில் உள்ள தூதுவர்கள் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு, இம் முயற்சியின் தொடர்பில் தமது அக்கறையைத் தெரிவித்துள்ளார்கள்.

பிரிபடாதஇலங்கைக்குள் அதிகாரங்களையும், வளங்களையும் பிரித்துக்கொண்டு இலங்கை இறைமையின் பங்காளர்களாக வாழும் முயற்சி என கட்சிகளுக்கான எனதுஅழைப்பில்தெளிவாகக் கூறியுள்ளேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பிரிவினைக்கு எதிரான சத்தியப் பிரமாணம் செய்துவிட்டே பதவி ஏற்றுள்ளார்கள். இதில் சிக்கல் உள்ளோர் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே முடியாது.

எனினும், நான் எந்தக் கட்சியையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும். வலியுறுத்தி அழைக்கவில்லை. விரும்பியோர் வரலாம். ஏனையோர் தவிர்க்கலாம். எல்லோரும் என் நண்பர்களே.

மாற்று வழி உள்ளோர் அவற்றைத் தாராளமாக நாடலாம். தாராளமாகப் போராடலாம். யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆட்சேபிக்கவில்லை.

நமது நாடு, வீடு, நிலம், மொழி, மதம், கலை, கலாசாரம், உயிர், பொருளாதாரம், உடைமை, உரிமை என எல்லாமே நாளுக்கு நாள் வேகமாகப் பறிபோனபடி இருக்கின்றன.

ஆகவே, எவராயினும், எதுவாயினும் செய்வதை விரைவாகச் செய்ய வேண்டும். ஊடக அறிக்கைகளுக்கு அப்பால் சென்று செயலாற்றவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (02)

# ஆளுமைகளில் ஒருவரை இழந்த இலங்கைத் தமிழ் ஊடகத்துறை

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இரங்கல்



இலங்கைத் தமிழ் ஊடகத்துறை ஆளுமைகளில் ஒருவரை இழந்துள்ளது என்றுதமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகத்தின் மறைவு தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள இரங்கல் செய்தி யில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை மையப்படுத்தி சங்கமொன்றை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனைகளைக் கொண்டிருந்தவர்களில் மாணிக்கவாசகமும் ஒருவராக இருந்தார்.

அதற்குச் செயல் வடிவம் கொடுப்பதில் ஏனைய ஊடகவியலாளர்களுக்கு உந்துசக்தியாகவும் அவர் விளங்கினார்.

இதையடுத்து உருவான தமிழ்ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைமை பதவியை அவர் இரண்டு தடவைகள் வகித்திருந்தார்.

வீரகேசரி, ரொய்ட்டர்ஸ், பி.பி.சி. உள்ளிட்ட பல் வேறு செய்தி நிறுவனங்களுக்கு தனது அந்திம காலம் வரையில் அறிக்கையிட்டு வந்திருந்த அவர், போர்க்காலம் உள்ளிட்ட விசேட நிலைமைகளில் மிகவும் காத்திரமான ஊடகப்பணியை துணிகரமாக ஆற்றியிருந்தார்.

பத்திகள், கட்டுரைகள், விசேடகள அறிக்கைகள் என்று பல்வேறு பேசவல்ல விடயங்களை வெளிக்கொண்டு வந்திருந்த இவர் ஊடகத்துறைக்கு அப்பால் பல்பரிமாணங்களைக்கொண்டவராகவும் திகழ்ந்தார்.

அவரின் நிரந்தரமான பிரிவானது, தமிழ் ஊடகத் துறைக்கு ஈடுசெய்ய முடியாத வெற்றிடத்தினை ஏற்படுத்தியுள்ளது. அவரதுபிரிவால் துயருறும்குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

இதேவேளை, அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துயாழ். ஊடக அமையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் துணிச்சலான ஊடக ஆளுமையை இழந்துவிட்டோம் என்று தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் ஊடகப்பரப்பில்இருந்துபேனா முனையின் துணையோடு ஜனநாயகத்துக்கான போராட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பொ.மாணிக்கவாசகம் என்ற ஊடக ஆளுமையை நாம் இழந்துவிட்டோம்.

சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டிலும் ஊடகங்களில் கோலோச்சிய ஆளுமையின் கரங்கள் ஓய்ந்துவிட்டன. ஓய்வின்றி ஒலித்த குரல் அமைதி கொள் கிறது. பொன்னையா மாணிக்கவாசகம் இறுதிவரை தற்துணிவுள்ள பேனா முனை போராளியாக திகழ்ந்தார்.

நடுநிலைதன்மையோடு, உள்ளதை உள்ளதாகச் சொல்லி, தமிழ் மக்களின் அவலங்களை உலகுக்கு வெளிப்படுத்திய உண்மை ஊடகவியலாளர் இவர். பல உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் துணிச்சலோடும் சோரம் போகாமலும் பேனா முனையோடு இவர் போராடினார்.

ஊடகத்துக்குபலம்சேர்த்த மாணிக்கவாசகம்அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உறவுகள், நண்பர்கள் துயரில் யாழ். ஊடக அமையமும் பங்கு கொள்கிறது - என்று ஊடக அமையம் மேலும் தெரிவித்துள்ளது

# ஹட்டனில் ஒருவர் மர்மச் சாவு

ஹட்டன் பொலிஸ் பிரிவில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிரவுன்ஸ் ஹேம்ஸ், ரயில் நிலைய வீதி பகுதியில் உள்ள வீடொன்றின் மாடிப்படியில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ஹட்டன் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்ததைத் தொடர்ந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எனினும், மரணத்தில் சந்தேகம் நிலவுகின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. ரயில் நிலைய வீதியின் பிரவுன்ஸ் ஹவுஸில் வசிக்கும் 58 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (02)

# தந்தை, மகன் மீது தாக்குதல்

குடும்பத்தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்த தந்தையும் மகனும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கட்டுபொத்த, தெபரே வெவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், தாக்குதலை மேற்கொண்ட நபரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கட்டுபொத்த மதுபான நிலையத்துக்கு முன்பாக இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கட்டுபொத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

## மந்திகை வைத்தியசாலையில் நிகழ்ந்த
# சிசுவின் இறப்பு குறித்து விசாரிக்கக் கோரிக்கை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிசுவொன்று உயிரிழந்தமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள உத்தரவிடுமாறு, பொலிஸார் ஊடாக நீதிமன்றத்துக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன்சிவராஜாவினால், மேலதிகவிசாரணையைமேற்கொள்வதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புலோலி வடக்கு, கூவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் பிரசவத்துக்காக வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டிருந்தார்.

அவருக்கு செவ்வாய்க் கிழமைகுழந்தைபிறந்தபோதிலும் இறந்துவிட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பில்உடற்கூறாய்வு மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விடுத்த பணிப்புரைக்கு அமைய, சட்ட வைத்திய அதிகாரி உடற்கூறாய்வு நடத்தினார்.

பிரசவ ஊசி செலுத்தப்பட்டதன் பின்னர் தாய் உரிய முறையில் கவனிக் கப் படாமையால், கருப்பை வெடித்து, சிசுவுக்குக் குருதி கடத்தப்படுவது தடைப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, பருத்தித்துறை பொலி-ஸார் ஊடாக நீதிமன்றத்தில் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (02)

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆதி சிவன் இடித்தழிப்பு, கச்சதீவில் புத்தர் சிலை வைப்பு என்பன தொடர்பாக வடக்கு கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரேநேரத்தில்போராட்டத்தை முன்னெடுப்பது என்று 7 அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் நடத்திய கூட்டத்தில் முடிவெடுத்திருந்தன.

அதனடிப்படையில் வவுனியாவில் இந்தப் போராட்டத்தை எப்படி முன்னெடுப்பது என்று ஆராய்வதற்காகத்தான் கடந்த வாரக் கூட்டம் போடப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்ட தமிழ் அரசுக்கட்சியின்செயலாளர்மருத்துவர்சத்தியலிங்கம்அங்கு கருத்துத் தெரிவிக்கும்போது, போராட்டம் நடத்தியெல்லாம் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது, மக்கள் போராட்டத்திற்கு வர மாட்டார்கள், அதனால் வேறு மார்க்கங்களைத்தான் தேட வேண்டும் என்ற சாரப்படக் கருத்துத் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த ஈபிஆர்எல்எவ் கட்சியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இந்த விடயத்தை நீங்கள் உங்கள் கட்சித் தலைவருக்குத்தான் சொல்லியிருக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் அங்கே (யாழ்ப்பாணத்தில்) இது தொடர்பாக எல்லா முடிவுகளையும் எடுத்துவிட்டார்கள். அதை எப்படி நடைமுறைப் படுத்துவது என்று ஆராய்வதற்காகத்தான் இங்கே கூடியிருக்கின்றோம். இப்போது போராட்டத்திற்கு சனம் வராது, போராடிப் பயனில்லை என்று சொல்வதில் பயனில்லை. அதை உங்கள் கட்சித் தலைவரிடம் சொல்லுங்கள் என்று கூறியிருக்கிறார்.

கட்சியின் தலைவர் போராட்டம் என்கிறார். கட்சியின் பதில் செயலாளரோ, (அவர்தான் இப்போது செயலாளராகத் தொழிற்படுபவர்) போராட்டத்தால் பயனில்லை, போராட்டத்துக்கு மக்கள் வரமாட்டார்கள் என்கிறார். கட்சித் தலைமை ஒரு முடிவை எடுத்து அதை ஊடகங்களில் அறிவித்ததுடன் அது நடக்கும் என்று இருந்தால் இப்படித்தான் நடக்கும். தலைவரின் அணுகுமுறையில் கட்சியின் செயலாளருக்கே நம்பிக்கையில்லை என்றால் எப்படித் தொண்டர்களை வழிப்படுத்த முடியும்? தாம் என்ன செய்யப் போகிறோம், எப்படிச் செய்யப்போகிறோம், மக்களைத்திரட்டிஅணிவகுக்க வைக்க என்ன செய்யப் போகின்றோம் என்கிற தலைமைத்துவத்தை வழக்கத் தவறும் பட்சத்தில் கட்சியின் அடுத்த மட்டத் தலைமைகள் இவ்வாறு நம்பிக்கையீனம் கொள்வது தவிர்க்க முடியாதது. என்றுதான் இவற்றுக்கெல்லாம் விடிவு கிடைக்குமோ. தந்தைசெல்வா சொன்னது போல கடவுளாலும் தமிழர்களைக் காப்பாற்ற முடியுமோ தெரியவில்லை

*****

சஜித் அணிப் பக்கம் இருந்து முக்கியமான புள்ளிகளை மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சிப்பக்கம்கொண்டு வர திரை மறைவிலும் நேரடியாகவும் எடுக்கப்பட்ட நகர்வுகள் பிசுபிசுத்துப்போன நிலையில், அதனால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவர் ராஜித சேனாரத்ன போன்று தெரிகிறது. சுகாதார அமைச்சுப் பதவி தந்தால் ஆட்சியில் சேர்ந்துகொள்வேன் என்று துள்ளிக் கொண்டிருந்தார் அவர். பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும் என்பதைப் போன்று சஜித் அணியில் இருந்த பலபூக்களைத்தொடுத்துக்கொண்டு ஆளும் தரப்புப் பக்கம் வந்து சேர்வார் என்கிற வகையில்தான் ராஜிதவுக்கு மவுசு இருந்ததாகத் தெரிகிறது. அது இல்லை என்றாகியபோது அவருக்கும் ஆளும் தரப்புப் பக்கம் இருந்த கேள்வி குறைந்துவிட்டது.

அதற்கிடையில் அவரது கருத்துக்களுக்காக சஜித் அணியிலிருந்தவர்கள் கொந்தளிக்கப் போக, அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அவரைத்தாமேகட்சியிலிருந்து வெளியே தூக்கி வீசி, ஆளும் தரப்புக்கு விரட்டிவிடுவதற்கும் சஜித்தும் முடிவெடுத்துவிட்டார். கட்சியே அவரை வெளியேற்றி விட்டால் அதன் பிறகு ஆளும் தரப்பில் அவரை ஏன் சீண்டப்போகிறார்கள்? அதனால் முதலுக்கே மோசம் வரப்போகிறது என்று பயந்துபோன ராஜித சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக் காரன் காலில் விழுவதே நல்லது என்று நேரடியாக சஜித்திடமே சரணடைந்து விட்டார்.

நான் அப்படிக் கருத்துத் தெரிவித்திருக்கக்கூடாது தான், இனிமேல் அப்படி எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்கின்றேன் என்றுகூறி சமரசம் செய்துகொள்ளப் பார்க்கிறார். கட்சித் தலைவரால் அவருக்கு எதிராக நியமிக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணைக் குழு ராஜிதவிடம் விசாரணை நடத்தியது. அப்போது, தான் கட்சியைவிட்டுப் போக மாட்டேன் என்றும் அரசில் இணைந்து கொள்ள மாட்டேன் என்றும் அமைச்சுப் பதவி கேட்கமாட்டேன் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் ஓர் அறிக்கையை விடுவார் என்றும்அதன்பின்னர்கட்சித் தலைவர் அவர் தொடர்பில் இறுதி முடிவை எடுப்பார் என்றும் ஒழுக்காற்றுக்குழு முடிவு செய்துள்ளது.

ராஜித கட்சி தாவுகிறாரோ இல்லையோ, அவர் மீது உடனடியாககட்சிஒழுக்காற்று விசாரணைகளை நடத்தியதற்காகவாது சஜித்தைப் பாராட்டவேண்டும். மத்திய குழுக்கூட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டு மாதக்கணக்காகிவிட்டபோதும் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதிருக்கும் தமிழ் அரசுக் கட்சி மாதிரி இல்லாமல் பொறுப்பான கட்சியாக நடந்து கொண்டதற்காகவே அவரை ஒரு தரம் பாராட்டலாம்.

- இடி மின்னல் -

## தமிழர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்டமைப்புவிடுத்துள்ளசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் சார்ந்த தேசிய சக்திகள், சமய சமூக தன்னார்வஅமைப்புக்கள் என பல தரப்புக்கள் இணைந்து முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்தில் 5 முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

1. அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம்செய்யப்படவேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டுகுற்றவாளிகள்கண்டறியப்பட்டுசட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

2. குருந்தூர் மலை, கண்ணியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

3. இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

4. மட்டக்களப்பு மயிலத்தனைமடுமேய்ச்சல்தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்தவேண்டும்.

5. போருக்குப் பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பெரும் குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த அடையாள உணவுதவிர்ப்புப் போராட்டம்

(03ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி) முன்னெடுக்கப்படவுள்ளது.எம் மரபுரிமைகளைவென்றெடுக்க ஆன்மீகத்தலைவர்கள்,ஆலய அறங்காவலர்கள், தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், சமூக மட்ட அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக சமூகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்படும் இந்த எழுச்சிபோராட்டத்தின்மூலம் தமிழர் மரபுரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்கள் திரண்டு வந்து பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த காலங்களில் பல கால அவகாசங்கள் வழங்கப்பட்டு, ஏமாற்றப்பட்ட நிலையில் உரிய தீர்வு உடனடியாக வழங்கப்படாவிடுத்து தொடர் போராட்டங்கள் பல்வேறு பரிணாமங்களில் முன்னெடுக்கப்படும் என்பதை ஆட்சியாளர்களுக்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் ஆழமாக வலியுறுத்தி நிற்கின்றோம் - என்றுள்ளது.

ஒருங்கிணைந்ததமிழர் கட்டமைப்பு என்கிற இந்தப் புதியஅமைப்புக்குறித்துமிகக் குறைவானதகவல்களேஉள்ளன. அது எப்போது அமைக்கப்பட்டது. அதன் தலைவர், செயலாளர்உள்ளிட்டநிர்வாக அமைப்புஎன்ன, எந்த நோக்கத்துக்காக இந்த அமைப்புத் தொடங்கப்பட்டது என் பன போன்ற விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

## கடன்மறுசீரமைப்புக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அத்துடன், ஏப்ரல் மாத இறுதிக்குள் கடன் மறுசீரமைப்புச்செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், கடன்களுக்காக இயற்கை வளங்களைப் பரிமாற்றிக்கொள்வது தொடர்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டால்அதனைஏற்றுக்கொள்ளத்தயார்என்றும் தெரிவித்துள்ளார்.

பன்னாட்டுஊடகங்களான ரொய்ட்டஸ் மற்றும் புளும்பேர்க் ஆகியவற்றுக்கு வொஷிங்டனின்புதன்கிழமை வழங்கியதனிப்பட்ட செவ்விகளின்போதே மேற்கண்ட விடயங்களை அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், புளும்பேர்க் நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியின்போது, கடன்மறுசீரமைப்புச் செயற்பாடுகளில் சீனாவின் ஒத்துழைப்புதொடர்பில்எழுப்பட்ட வினாவுக்கு பதிலளித்த அவர்,

உள்நாட்டில்முன்னெடுக்கப்படும்கடன்மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பில் வெளிப்படைத் தன்மை பேணப்படும் என்பதைஇருமாதங்களுக்கு முன்னதாகவே, பகிரங்கமாக அறிவித்துள்ளோம்.

மத்திய வங்கி பெற்றுக்கொண்டுள்ள திறை சேரிப் பத்திரங்களை மறுசீரமைப்புக்கு உள்ளாக்கவுள்ளதாக இதன்போது நாம்கூறினோம். அத்துடன்திறைசேரிமுறைகள்தொடர்பில் தன்னார்வ அடிப்படையில் தயாராகவுள்ளதாகவும் குறிப்பிட்டோம்.

எவ்வாறாயினும், திறைசேரிமுறைகள்தொடர்பிலான தன்னாவு அடிப்படை முறைமையானது ஏனையவற்றுடன் ஒப்பீடு செய்யப்பட்டே முன்னெடுக்கப்படவுள்ளது. இவை நாம் உள்நாட்டில் முன்னெடுக்கின்றன அர்ப்பணிப்புக்களாகும்.

முன்னதாக, வரவு - செலவுத்திட்டத்தில் துண்டு விழும்தொகையைக்குறைத்தல், பணவீக்கத்தைக் கட்டுப்பத்தல். உள்ளிட்ட செயற்பாடுகள் சர்வதேச நாணயத்திற்கு காண்பிக்கப்பட்டுள்ள அர்ப்பணிப்பான செயற்பாடுகளாகும். அந்தச் செயற்பாடுகள் அவ்விதமாகவே தொடரப்படவுள்ளன.

இவற்றுக்கு அப்பால் உள்நாட்டுகடன்மறுசீரமைப்பு தொடர்பான திட்டத்தினை ஏப்ரல் மாத இறுதியில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் வணிகக் கடன்கள் உட்பட பெரும் இருதரப்புக் கடன்கள் தொடர்பான எமது செயற்பாடுகள் முழுமையடையவுள்ளன.

சீனா எமக்கு கடன் உத்தரவாதஎழுத்துமூலஆவணத்தை வழங்கியுள்ளது. அதன் மூலமாக சீனா எமக்கு அவசியமான விடயமொன்றைநிறைவேற்றியுள்ளது. சீனா முதன்முறையாக இலங்கை விடயத்தில்தான் தனது கடன் உத்தரவாத நிலைப்பாட்டை துரிதமாக வழங்கியிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும்அதேநேரம், சீனாவுடன் செயற்படுவதற்கும் தயராகவே உள்ளோம். சீனா பல்வேறு காலமாகவே இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளதோடு முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளது. ஆகவே, சீனாவுக்கும், எமக்கும் மிகத் துரிதமாக மறுசீரமைப்புச் செயற்பாட்டை பூர்த்திசெய்யவேண்டியுள்ளது.

அதன் மூலமாக எமது கடன் மீளச் செலுத்தும் நடவடிக்கையை நாம் தாமதமின்றித் தொடங்க முடியும். அந்த வகையில் சீனா இலங்கைக்கு கட்டாயமாக உதவும்என்றநம்பிக்கைஎமக்குள்ளது. அதற்கான பகிரங்க அறிவிப்பையும் சீனா விடுத்துள்ளது - என்றார்.

இதனையடுத்து ரொய்ட்டஸ்செய்திநிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியின்போது, இறையாண்மை முறிகள் தொடர்பிலானநிலைமைகள் பற்றி அவரிடம் வினவப்பட்டது.

7.1மில்லியன் டொலர்கள் பெறுமதியான கடனை மறுசீரமைப்பது தொடர்பில் தாம் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை இறையாண்மை முறிகளின் உரிமையாளர்கள் இலங்கைக்குத் தெளிவுபடுத்தவில்லை.

அவர்கள் குழு என்ற அடிப்படையில் இருதரப்பாக உரியஅறிவிப்பைவெளியிடாதுள்ளார்கள். இந்த விடயம் கடன் வழங்குநர்கள் சார்ந்ததாக இருந்தாலும் ஒரே மேடையில் குறித்த விடயம் தொடர்பிலும் தீர்மானம் வெளிப்படுத்தப்பட்டால் அது தொடர்பிலான எதிர்காலச் செயற்பாடுகளுக்கு ஏதுவாக இருக்கும் - என்றார்.

தொடர்ந்து, சர்வதேச நாணய நிதியத்தின் புதிய கருப்பொருளுக்கு அமைவாக, கடன்களுக்காக இயற்கை வளங்களை பரிமாற்றிக்கொள்வதுதொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டால் இலங்கை என்ன செய்யும் என்று வினவப்பட்டது,

அந்தக் கருப்பொருளாதானதுமிகவும்பயனுள்ள,காலத்துக்குஏற்றநிதிக்கருவியாகும். இலங்கை மிக விரைவாக கடன்மறுசீரமைப்புச் செயற்பாட்டைபூர்த்திசெய்வதையே இலக்காகக் கொண்டுள்ளது.

கடன்வழங்குநர்கள் குறித்த கருத்திட்டத்தினை ஏற்றுக்கொண்டு வேண்டுகோள் விடுத்தால் அதனைக் குறித்தகாலப்பகுதிக்குள்நிறைவேற்றுவதற்கான இயலுமைகள் காணப்பட்டால் அத்திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு தயாராகவே உள்ளோம் - என்று ஆளுநர் பதிலளித்தார்.

கடன்களுக்காக இயற்கை வளங்களை பரிமாற்றிக்கொள்வது என்பது அந்தந்தநாடுகளின் இயற்கை வளங்களை பாதுகாக்கும் செயற்பாட்டில்கடன்வழங்கும் தரப்பினர் தலையீடுகளைச் செய்ய முடியும் என்ற வகையில் சர்வதேச நாணயநிதியத்தினால்உருவாக்கப்பட்டகருப்பொருளாகும்.

குறித்தகருப்பொருளுக்கு அமைவாக, கடன்நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் பகுதிகள்மற்றும்உயிர்ப்பல்வகைமைப்பகுதிகள் ஆகியவற்றை பாதுகாக்கும் செயற்பாட்டில் கடன்வழங்குநர்கள் ஈடுபட முடியும். அந்த ஈடுபாட்டில் நிதிவழங்குதல் உள்ளிட்ட செயற்பாடுகள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 5ஆவது சுற்று பேச்சு கடந்த செவ்வாய்கிழமை கொழும்பில் நடைபெற்றுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று தகவல்வெளியிட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில், இருதரப்பினரும்பொருட்கள் மற்றும்சேவைகள்வர்த்தகம், முதலீடு, மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுங்க நடைமுறைகள் மற்றும் சந்தை வாய்ப்பு வசதிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கருத்துகளை பரிமாறிக் கொண்டனர் எனவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவிற்கும்இலங்கைக்கும் இடையில் சாத்தியமான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சு 2014இல் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் மற்றும் இலங்கையின் முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் தொடங்கியிருந்தது.

நிபுணர்களின் கூற்றுப்படி, சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இலங்கைக்கு பாதகமானது என்றும் இலங்கை வருமானத்தினை ஈட்டுவதற்கு பயன்படுத்தும்இறக்குமதிவரி போன்ற கட்டணங்களைக் கட்டுப்படுத்துவதாகஅமையும் என்றும்எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை போன்ற ஒரு வளர்முக நாட்டிற்கு, சீனாவின் ஏற்றுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்படும்பட்சத்தில் ஆயிரக்கணக்கான பிற பொருட்களின் வர்த்தகத்திற்கான தடைகள் நீக்கப்படும். இதனால் இலங்கையில் உள்நாட்டு ஏற்மதி வளர்ச்சி தோல்வி காணும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, 2009இல் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர், துறைமுகம், விமான நிலையம், நெடுஞ்சாலைகள் மற்றும் பிற குறிப்பிடத்தக்க திட்டங்கள் உட்பட பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களுக்காகசீனா இலங்கைக்கு ஏராளமான கடன்களை வழங்கியுள்ளது.

இந்தக் கடன்களுக்கான பின்னணியில் சீனா, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதன் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கானதிரை மறைவுத் திட்டமுள்ளதோடு ஒரேமண்டலம் மற்றும் பாதை மூலோபாயத்தின் கேந்திரப்பகுதியாக இலங்கை அமைந்துள்ளதாகவும் மேலும் நிபுணர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆர்ப்பாட்டம், உணவு நெருக்கடி, எரிவாயு மற்றும் எரிபொருள் வரிசை யுகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்வே முற்றுப்புள்ளி வைத்தார்.

விவசாயிகள் ஒரு புறம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஜனாதிபதியாகப் பதவியேற்ற சிறிது காலத்திலேயே அனைத்துப் போராட்டங்களுக்கும் ஜனாதிபதி தீர்வு கண்டார்.

எனவே,அடுத்ததேர்தலில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கபோட்டியிடுவாராயின் மக்கள் அவரை தேசிய சொத்தாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் - என்றார். (02)

## புலனாய்வுப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காலாவதியான பொருட்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன், போலி நாணயத்தாள்களும் புழக்கத்தில் விடப்படுகின்றன. அது குறித்து அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அதேநேரம், திட்டமிட்ட வாறுதிருட்டுச்சம்பவங்களின் ஈடுபடும் குழுவினரின் நடமாட்டம் உள்ளதால், பொது மக்கள் பெறுமதியான ஆபரணங்களைஅணிந்துசெல்ல வேண்டாம்என்பதுடன்பணப் பையைக் கவனமாக வைத்திருக்க வேண்டும். - என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுக்கொண்டார். (02)

## தென்கொரியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தென்கொரியாவில்தங்கியுள்ள இலங்கையர்களால் விடுக்கப்பட்ட அழைப்பையேற்றே அவர் அங்கு செல்கின்றார்.

தென்கொரியாவில் குடியேறியுள்ள இலங்கையர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து விடுத்த அழைப்பையேற்றே அநுர அங்கு செல்கின்றார்.

சர்வதேசநாணயநிதியத்தின் கடன், இலங்கையின் நடப்பு விவகாரம் பற்றி அவர் அங்கு சிறப்புரையாற்றவுள்ளார். (02)

## கடன் மறுசீர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பணிப்பாளர் இம்மானுவேல் மௌலின் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன்இச்செய்தியாளர் சந்திப்பில் இலங்கையும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளும், ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவும் மெய்நிகர் வழியிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சுதந்திர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதன் ஊடாக அரசுக்குக் கீழ்ப்படிந்து இணங்கும் பொம்மை ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் கூறி னார்.

எதேச்சதிகார சர்வாதிகார, உத்தேச ஒலிபரப்பு அதிகார சபை சட்டம் மூலம் நாட்டின் ஊடகங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தலை உடனடியாக நிறுத்துவதற்கு முன்னின்று செயற்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (02)

## ஊடகச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விஜயதாஸராஜபக்சதெரிவித்திருந்தார். இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொலைக்காட்சிகள், வானொலிகள் மற்றும் சமூக ஊடகங்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும். ஊடக சுதந்திரத்தைப் புதிய சட்டம் மூலம் அரசு தட்டிப் பறிக்க முடியாது.

ஊடகங்களின் விமர்சனங்களுக்கு இந்த அரசு ஏன் அஞ்சுகின்றது? எமது நல்லாட்சி அரசையும் சில ஊடகங்கள் சகட்டுமேனிக்கு விமர்சித்தன. அதை நாம் எதிர்கொண்டோம். விமர்சனங்களை எதிர்கொள்ள - அவற்றுக்குத் தகுந்த பதில் வழங்கஅரசுக்குமுதுகெலும்பு இருக்க வேண்டும் - என்றார். (02)

## சிங்கள பௌத்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஏற்கனவே பாளிமொழியும் தமிழ் மொழியும் அம்மொழியின் ஆணி வேர்களாக இருந்து வந்துள்ளன.

சிங்களஅரசியல்வாதிகள் மிஞ்சினால் கெஞ்சுவார்கள் கெஞ்சினால் மிஞ்சுவார்கள்.

இவற்றை எல்லாம் இந்தியா புரிந்து கொண்டு வடகிழக்கில் பௌத்த ஆதிக்கத்தை உட்புகுத்துவது ஏன் என்று அரசாங்கத்திடம் கேட்கலாம். தொல்பொருள் காரணங்களுக்காக என்றால் ஏன் பௌத்த சிலைகள் சிங்களப் பௌத்தர்களால் அங்கு வைக்கப்பட வேண்டும்? ஏன் இந்துக் கோயில்கள் அழிக்கப்பட வேண்டும்? ஏன் இராணுவத்தை இதனோடு சம்பந்தப்படுத்த வேண்டும் என்று கேட்கலாம்.

பௌத்த எச்சங்கள் வடகிழக்கில் இருப்பது உண்மை. ஆனால் அவை தமிழ் பௌத்தர்கள் காலத்தவை. பௌத்தத்தை இலங்கையில் வரவேற்ற அரசர்;கள் தமிழ் அரசர்களே. தேவனைநம்பிய தீசன் தமிழனே. எல்லாளன் சைவத் தமிழர். துட்டகை முனுபௌத்ததமிழர். தெற்கில் இருந்து வடக்கு நோக்கி படை எடுத்து வரும் போது எத்தனைதமிழ்சிற்றரசர்களை வென்று துட்டகைமுனு அனுராதபுரம்வந்தார்என்பது மகாவம்சத்தில்கூறப்படுகிறது. அந்த காலகட்டத்தில் சிங்கள மொழி பிறந்திருக்கவில்லை. மகாவம்சம் கூறும் விஜயனின் சரித்திரம் பற்றி இந்திய நாடுகளின் சரித்திரத்திலோ இலக்கியத்திலோ குறிப்பிடப்படவில்லை. வங்காளத்திலோ ஒரிசாவிலோ விஜயனும் 700 பேரும் நாடு கடத்தப்பட்டார்கள் என்று எங்கணுமே கூறப்படவில்லை. மகாவம்சம் வரலாற்று நூல் அல்ல. பௌத்தத்தை நல்லவாறு விமர்சிக்க புத்த பிக்கு ஒருவரால் எழுதப்பட்டது.

தமிழர்காலத்துஎச்சங்கள் பௌத்த எச்சங்கள் என்ற காரணத்தால் எவ்வாறு சிங்களவர்கள் அங்கு சென்று உரிமை கொண்டாடி பௌத்த சிங்களவர்களை அங்கு காட்சிப்படுத்தலாம்? யுனிசெவ் போன்ற நிறுவனங்கள் பக்கச் சார்பின்றி ஆராய வேண்டிய விடயங்களை இலங்கை அரசாங்கம் தனது சிங்களப் பெரும்பான்மையர் அங்கம் வகிக்கும் தொல்பொருள் திணைக்களத்தினூடு ஆராய முயல்வது வெறும் தொல்பொருள் ஞானத்தை வளர்க்க அல்ல. சிங்கள ஆதிக்கத்தை பௌத்த சின்னங்களினூடு பாரம்பரிய தமிழ் பிரதேசங்களில் விரிவாக்கவே.

இதனை இந்தியா அறிந்து கொண்டு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். மேலும்திருக்கேதீஸ்வரத்தை புனருத்தாரணம் செய்தது போன்று திருக்கோணேஸ்வரத்தையும் புனருத்தாரணம் செய்ய இந்தியா முன்வர வேண்டும். உண்மையான பழமை வாய்ந்ததிருக்கோணேஸ்வர சிவலிங்கம்இன்றுகடலினுள் அமிழ்ந்து கிடக்கின்றது. அது வெளிக்கொண்டு வரப்பட்டு சிறந்த ஒரு சிவன் கோவில் அங்கு கட்டப்பட வேண்டும். இளைஞனாக கொழும்பு வீதிகளில் அழகிய பெண்களுடன் நவீன மோட்டார் வாகனங்களில் 1950 60களில் வலம் வந்த மைக் வில்சன் என்பவர் கடலுக்கடியில் இருந்த சிவலிங்கத்தைத் தரிசித்தவுடன் இந்து சுவாமியாக மாறினார். யோக சுவாமியா ரின் சீடர் ஆனார். திருக்கோணேஸ்வரம் பாடல் பெற்ற தலம். கைலா சமும், சிதம்பரமும், திருக்கோணேஸ்வரமும் ஒரே தீர்க்க ரேகையில் (Longitude) உள்ளன. இந்தியாவின் உதவியோடு கட்டாயமாக சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்களை முறியடிக்கலாம்.

## மொட்டுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் ஆகியவற்றை அரசு கொண்டுவரும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்துரைக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஒரு கட்சியின் தலைவர். கட்சியுடன் பேசியத்தான் கட்சி தொடர்பான நிலைப்பாடுகளைத்தெரிவிக்க முடியும். எனினும், மக்களுக்கும் ஊடகங்களுக்கும்பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கமாட்டாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெறும்கட்சி அல்ல. மக்கள் ஆணையால் தெரிவு செய்யப்பட்ட அரசும் கூட.

மொட்டு ஆட்சி சர்வாதிகார ஆட்சி இல்லை என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும். மக்கள் பக்கம் நின்று நாட்டின் நலன் கருதியே நாம் முடிவு எடுப்போம் - என்றார். (02)

## ஆட்சியிலுள்ள ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஒருபுறம் புதிய பயங்கரவாதஎதிர்ப்புச்சட்டம், மறுபுறம் ஊடகங்களைக்கட்டுப்படுத்தும் புதிய சட்டம் என இரண்டு கொடூர சட்டங்களை ஒரே தடவையில் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றது.

மக்களின் ஜனநாயக உரிமையை, கருத்துச் சுதந்திரத்தைப்பறிக்கும்எந்தவொரு சட்டத்துக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம்.

இந்தஅரசுதிருந்தவேண்டும் அல்லது பதவி விலக வேண்டும். அதைவிடுத்து எதேச்சதிகார வழியில் இந்த அரசு பயணித்தால் மக்களுடன் சேர்ந்து அரசை ஓட ஓட விரட்டியடிப்போம். நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவோம் - என்றார். (02)


விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622







காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அணு மின் உற்பத்தி வேண்டாமே!

இலங்கையின் மின்சாரத் தேவைக்கும் இந்தியாவுக்கு அதனை ஏற்றுமதி செய்வதற்குமாக அணு மின் நிலையங்களை அமைப்பது தொடர்பில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆர்வம் கொண்டுள்ளார். ரஷ்யாவின் உதவியுடன் அணு மின் நிலையத்தை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளையும் அவர் தொடங்கியுள்ளார். 2010ஆம் ஆண்டிலும் அவர் இதுபோன்றதொரு முயற்சியை மேற்கொண்டிருந்தார். அப்போது தென்கொரியாவின் உதவியுடன் அதனைக் கொண்டுவர அவர் முயன்றார்.

இலங்கை போன்ற சிறியதொரு நாட்டிற்கு அணு மின் நிலையம் அவசியம்தானா? சாத்தியமானதுதானா? பொருத்தமானதுதானா? இல்லை என்கிறது பிரிட்டனைத் தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றின் ஆய்வு. அந்த நிறுவனம் தனது ஆய்வு அறிக்கையை இலங்கை ஆட்சியாளர்களிடமும் ஜெனீவாவில் ஐ.நாவிடமும் கையளித்துள்ளது.

அணுமின் நிலையங்கள் ''பசுமைச் சக்தி'' என்று சொல்லப்பட்டாலும் யுரேனியத்தை எடுக்கும்போதும் தூய்மைப்படுத்தும் போதும் அதிகளவில் கரியமில வாயு (கார்பனீர் ஒட்சைட்) வெளிப்படும். அணு மின் நிலையங்களை உருவாக்கும்போது அதற்குப் பயன்படுத்தப்படும் கட்டடங்கள், இரும்புகள் என்பவற்றாலும் கரியமில வாயு வெளியேற்றம் பெருமளவில் நிகழும். அதேபோன்று அணு உலைகளின் ஆயுட்காலம் நிறைநவடைந்த பின்னர் அவற்றை மீண்டும் உருக்குலைக்கும்போதும் பெருமளவில் கரியமில வாயு வெளியேற்றப்படும்.

இலங்கையில் ஒரு சாதாரணமான அணு மின் நிலையத்தை உருவாக்குவதற்கு 5 தொடக்கம் 8 வருடங்கள் பிடிக்கும் என்பதுடன் 2 முதல் 5 பில்லியன் டொலர்கள் செலவு பிடிக்கும். வருடாந்தம் 5 முதல் 6 பில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டியுள்ள இலங்கையால் இப்போதைக்கு அவ்வளவு பணத்தைத் திரட்டுவது சவால் மிக்கது என்பதுடன் பொருளாதாரச் சுமையையும் அதிகரிக்கவல்லது.

ஒரு அணு உலையை உருவாக்குவதற்கு எடுக்கும் காலத்தைவிட அதன் காலம் முடிந்த பின்னர் அதனை உருக்குலைத்து அந்தப் பகுதியை கதிரியக்கப் பாதிப்பு இல்லாத இடமாக்க மிக நீண்ட காலம் '30 ஆண்டுகள்' செல்லும். அத்தோடு அணு உலைகள் ஊடாக வரும் அணுக் கழிவுகளைக் கையாள்வதற்கான திட்டமும் நுட்பமும் இலங்கைக்குச் சவாலானவை. இந்தக் கழிவுகளும் அணு உலைகளின் காலத்திற்கு ஆப்பாலும் நீடிக்கக்கூடியவை. அவற்றைப் பாதுகாப்பதற்கான அறிவும் அனுபவும் இலங்கையிடம் இல்லை. இனித்தான் உருவாக்கப்பட்டாக வேண்டும்.

அந்தக் கழிவுகளை ரஷ்யா தானே திரும்ப எடுத்துக்கொள்ளும் என்று செய்திகள் கூறுகின்றன. அப்படி நடந்தாலும் ரஷ்யாவின் புவிசார் அரசியலுக்குள் இலங்கை நுழைந்து பக்கச்சார்பற்ற நிலை என்கிற தனது அரசியல் இருப்பை அது இழக்கவேண்டியிருக்கும்.

அத்தோடு அணு மின் நிலையம் ஒன்றை உருவாக்கி இயக் குவதற்கான அறிவும் ஆளணியும் இலங்கையில் தற்போதைக்கு இல்லை. அணுச் சக்தி தொடர்பில் கலாநிதிப் பட்டம் வரையில் மேற்படிக்பைப் பூர்த்தி செய்யக்கூடிய பொறிமுறைகள் இனித்தான் உருவாக்கப்படவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தீவிரவாதத் தாக்குதல்களில் இருந்தும் இயற்கைப் பேரிடர்களில் இருந்தும் அணு உலைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கான பெரும் பெறிமுறை அவசியம். இதில் ஏதாவது தவறுகள் நடக்குமானால் பேராபத்து விளையும். ஒருவேளை அணு மின் நிலையங்களில் விபத்துக்கள் ஏற்பட்டால் அதனைக் கையாள்வதற்கான தொகுதிகளையும் பயிற்சிகளையும் பெறுவதும் கையாள்வதும் பெரும் சவால் மிக்க பணிகள்.

இவ்வறு பாதகமான அம்சங்கள் பலவற்றையும் வைத்துக்கொண்டு ஓர் அணு உலைக்குச் செல்வதற்குப் பதிலாக புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமாக (காற்று, சூரிய ஒளி, கடல் அலை) என்பவற்றின் துணையோடு மின்சார உற்பத்தியைப் பெருக்குவதே இலங்கைக்குச் சிறந்தது இலங்கையைச் சுற்றிக் கடல் உள்ளது அதனது அலைகளைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டமும் இலங்கைக்குப் பெரிதும் பயன்படக்கூடியது.

அணு மின் நிலையத்தை விட்டுவிட்டு அத்தகைய புதுப்பிக்கத்தக்க சத்தி மூலமான உற்பத்தியை ஊக்குவிக்கவும் ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே இலங்கைக்குப் பாதுகாக்கானதும் சிறந்ததும்.

# மாணவர்களைப் பழிவாங்காதீர் பேராசிரியர்களிடம் கோரிக்கை

## சாந்தினி கோங்கஹகே விடுத்தார்



மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு கல்விபொதுத்தராதர உயர்தர பரீட்சைவிடைத்தாள்மதிப்பீட்டு நடவடிக்கை ஆசிரியர் மற்றும் பல்கலைக்கழகபேராசிரியர்கள் ஆரம்பிக்க வேண்டும்.

வரிக்கொள்கையை பயன்படுத்திக்கொண்டு மாணவர்களை பழிவாங்கக்கூடாது என ஐக்கிய தேசிய கட்சி செயற்குழு உறுப்பினர் சாந்தினி கோங்கஹகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழிற்சங்க போராட்டத்தைகடந்தஒருமாத காலமாக முன்னெடுத்து வருகின்றனர்.

வரிக்கொள்கை என்பது அனைவருக்கும் பொதுவானது. அது பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு மாத்திரமானதல்ல. இந்த வரிக் கொள்கையில் அரச துறையில் 5 வீதமானவர்களே உள்வாங்கப்படுகின்றனர்.

அவ்வாறு இருக்கையில், ஆசிரியர் சங்கம், பல்கலைக் கழக பேராசிரியர் சங்கம் இதனை முன்னிலைப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் போராட்டம் காரணமாக கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப் படாமல் இருக்கிறது.

விடைத்தால் மதிப்பீட்டு நடவடிக்கையில் கலந்து கொள்ளும் மதிப்பீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் கொடுப்பனவுள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

என்றாலும் பல்கலைக் கழகபேராசிரியர்கள் ஆயிரத்தி 400 பேர் வரையானவர்கள் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் கலந்து கொள்ளாமல் இருந்துவருகின்றனர். இவர்களின் இந்த நடவடிக்கையால் தற்போது கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்பட்டிருக்கிறது.

எனவே, அரசியலுடன் சம்பந்தமில்லாத மாணவர்களின்எதிர்காலத்தைக்கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் தங்களது கடமையை நிறைவேற்ற முன்வரவேண்டும்.

வரிக்கொள்கையை பயன்படுத்திக்கொண்டுமாணவர்களின் எதிர்காலத்தை அழித்துவிடக்கூடாது. அதனால் மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டாவது இந்த பணியைஅவர்கள் ஆரம்பிக்க முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்துக்கு 2021இல் மட்டும் 5 கோடி ரூபா இழப்பு

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தகவல்

அரசமருந்தாக்கற்கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 50 அரச மருந்தக நிலையகங்களின் (ஒசுசல) 26 இல் தேவையற்ற செலவுகள் அடங்கலாகபல்வேறுகாரணங்களால் 2021 ஆம் ஆண்டில் 5 கோடியே 32 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் குறிப்பிடுகின்றது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, இரத்தினபுரி, ஸ்ரீஜயவர்தனபுர , பண்டாரகம மற்றும் மொனராகலை ஆகிய நான்கு அரச மருந்தகங்களில் 2020 ஆம் ஆண்டு, இலாபம் ஈட்டி இருந்த நிலையில், 2021 ஆம் ஆண்டில் நஷ்டத்தை சந்தித்துள்ளன.

இது தொடர்பாக, தேசிய கணக்காய்வு அலுவலகம் அரச மருந்தக கூட்டுத்தாபன நிர்வாகத்திடம் வினவியிருந்த போது, கொரோனா அச்சுறுத்தல் நிலவிய காலத்தில் மருத்துவப் பொருள்கள் சேதம் மற்றும் காலாவதியானதே இழப்புக்கு முக்கியக் காரணம் என விளக்கமளித்துள்ளது.

மேலும், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டில் மருந்தக ஊழியர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் காணப்படவில்லை. எனினும், ஊழியர்களின் செலவுகள் 10 முதல் 32 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர மருந்தகத்தின் ஊழியர்களின் செலவு கடந்த 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 47 லட்சத்துக்கும் அதிகமாக அதிகரித்துள்ளதாகவும், இது அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் இழப்பை நேரடியாகப் பாதித்துள்ளதாகவும் கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு முதுகெழும்பே இல்லை

## லக்ஷ்மன் கிரியெல்ல காட்டம்



தேர்தல் ஆணைக்குழு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலேயே தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கலாம் என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். சுயாதீனமானதெனக் கூறினாலும், ஆணைக்குழு முதுகெழும்பின்றியே செயற்பட்டுக் கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் இணைவதுதொடர்பில்ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை. எமக்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப் படவுமில்லை என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சிதலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தமது நிபந்தனைகளை செயற்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் சிவில் சமூக பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. தேர்தலை நடத்துவதற்கான நிதியை விடுவிக்குமாறு விடுக்கப் பட்டுள்ள நிபந்தனையையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை.

தமது நிபந்தனைகளை செயற்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் தொடர்பில் கண்காணிப்பதற்காக நாணய நிதிய தூதுக்குழுவொன்று எதிர்வரும் ஜூன் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமைக்காக ஜனநாயக மீறல்களுக்கு இடமளிக்க முடியாது.

நாணய நிதியத்துடன் சுமுகமான பேச்சுகளை முன்னெடுத்து மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளபொருளாதார சுமைகளை அரசாங்கத்தால் குறைத்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு எந்த முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

அண்மையில் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட அமைதியான ஆர்ப்பாட்டங்களில் பாதுகாப்பு படையினரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கண்ணீர்ப்புகை பிரயோகத்தால் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறான நடவடிக்கைகள் ஜூனில் சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழு நாட்டுக்கு விஜயம் செய்யும் போது அரசாங்கத்துக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை. எமக்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப் படவுமில்லை. மக்கள் ஆணையுள்ள அரசாங்கத்துக்கே தம்மால் உதவியளிக்க முடியும் என்று நாணய நிதியம் கடந்த ஆண்டு செப்ரெம்பரில் தெரிவித்திருந்தது. ஆனால் தற்போது நாட்டில் மக்கள் ஆணை சூனியமாகியுள்ளது. நாணய நிதியமும் அது தொடர்பில் தற்போது அவதானம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

எனவேதான் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துமாறு நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். தேர்தல் ஆணைக்குழு கடந்த ஆண்டு செப்ரெம்பரிலேயே தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கலாம் என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். சுயாதீனமானதெனக் எனக் கூறிக் கொண்டு ஆணைக்குழு முதுகெழும்பின்றியே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. - என்றார்.

# கோழி இறைச்சியின் விலை எகிறல் மாபியாக்கள் உருவாக்கிய மாயை

## பண்ணையாளர் ஒன்றியம் விளக்கம்

நாட்டில் கோழி இறைச்சிக்கு தட்டுப்பாடு காணப்படுவது போன்றதொரு மாயையை உருவாக்கி, கோழி இறைச்சி வர்த்தகத்தில் ஈடுபடும் மாபியா கும்பலொன்று, நாட்டில் கோழி இறைச்சியின் விலையை அதிகரித்துள்ளதாக தேசிய கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சுஜீவ தம்மிக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கோழிவளர்ப்புபண்ணையாளர்கள் முன்னர் இருந்த விலைக்கே, தற்போதும் தட்டுப் பாடின்றி கோழி இறைச்சி வர்த்தகர்களுக்கு கோழியை விநியோகித்துவருகின்ற போதிலும், சந்தையில் கோழி இறைச்சிக்கான தேவை அதிகமாக காணப்பட்டுவருவதே கோழி இறைச்சியின் விலை அதிகரிப்புக்கான காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையின்படி, தோல் அகற்றப்படாத ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 950 ரூபாவுக்கும், தோல் உரிக்கப்பட்ட ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 1200 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது பண்டிகைக் காலம் என்பதால், எதுவித தட்டுப்பாடுமின்றி கோழி இறைச்சி விநியோகிக்கப்பட்டு வந்தாலும், கோழிப்பண்ணைகளில் கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. ஆகவே, எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும். - என்றார்.

# பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலய திறனாய்வுப் போட்டி இன்று நடந்தது

கிளிநொச்சி பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நேற்று (புதன்கிழமை) பிற்பகல் ஒரு



மணிக்கு கல்லூரி முதல்வர் லயன் கு.லெனின்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம



விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்குமாரும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தனும், கௌரவ விருந்தினர்களாக பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர்



ந.கணேஸ்வரநாதன், கொழும்பு விவேகானந்தசபை கலாசார





செயலாளர் லயன் சு.சந்திரசேகர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி நோர்வே பழைய மாணவர் ஒன்றியத்தலைவர் கா.நிர்மலநாதன், பூநகரி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.சிந்துஜன், செ. விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புத்தளம் கல்லடி பகுதியில் இளைஞனின் சடலம் மீட்பு

புத்தளம் கல்லடி நெளும்வெள பகுதியில் ஆணொருவரின் சடலமொன்று செவ்வாய்க்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது.

சிலாபம் ஆராச்சிக்கட்டுவ பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளம் ஆணொருவரின் சடலமே இவ்வாறு அடயாளம் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு கல்லடி பகுதிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்டார்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் நீதிமன்ற நீதிவானுக்கு அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதாக அவர் இதன்போது யெரிவித்தார்.

மேற்படி சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையெனவும் மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் புத்தளம் பொலிஸாரும் மற்றும் தடயவியல் பொலிஸாரும் தெரிவித்தனர்.

# இலவச கராத்தே, குத்துச் சண்டை வகுப்புகளுக்குப் பதிவு செய்யலாம்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் 4 வயது தொடக்கம் 21 வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் இருபாலாருக்குமான விளையாட்டுத்துறை சார்ந்த பின்வரும் பயிற்சிகள் தேவைப்படுபவர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப்பயிற்சிகள் துறைசார்ந்த பயிற்றுவிப்பாளர்களால் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் தங்களது விவரங்களை வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் நேரடியாகவோ அல்லது வட்ஸ் அப் 0763119485, தொலைபேசி 0760503863, 0761899651, ஊடாக சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பதாரியின் முழுப் பெயர், வயது,

விரும்பும் விளையாட்டு - (கராத்தே, குத்துச்சண்டை, தைக்கொண்டோ), வதிவிட முகவரி,

தொலைபேசி இலக்கம் என்பவற்றை சமர்ப்பிக்கவேண்டும். குத்துச்சண்டை பயிற்சி நடைபெறும் இடம்: இராமநாதன் கல்லூரி பயிற்சி நிலையம், பருத்தித்துறை பயிற்சி நிலையம்

கராத்தே, தைக்கொண்டோ பயிற்சி நடைபெறும் இடம்:- 12 ஆவது, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி முகவரி:- 021 221 5054, 0760503863 - என்றுள்ளது.

# ரயிலிலிருந்து வீழ்ந்தவரின் இரு கால்களும் துண்டிப்பு

கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பெலியத்த நோக்கிசென்ற காலி குமாரி ரயிலில் பயணித்த ஒருவர் ரயிலிலிருந்து தவறிவீழ்ந்து கால்களை இழந்துள்ளார் என காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மிரிஸ்ஸ பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞரே இந்த விபத்தால் கால்களை இழந்துள்ளார். காலி குமாரி ரயில், காலி ரயில் நிலையத்தை சென்றடைந்த போது, அவர் ரயிலிலிருந்து தவறிவீழ்ந்தார் என ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். விபத்தில் சிக்குண்டவரின் இரண்டு கால்களும் முற்றாக துண்டிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் கராப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து; உரிய தரப்பினருக்கு எதிராக வழக்கு தாக்கு

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிப்பு



எம்.வி.எக்ஸ்பிரஸ்பேர்ள் சரக்குக் கப்பல் தீ விபத்தால் ஏற்பட்ட சமுத்திர மாசடைவு தொடர்பில் உரிய தரப்பினருக்குஎதிராகநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்.

அத்துடன் இந்த விபத்து தொடர்பில் சிங்கப்பூர் நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்யஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது எனகடல்சார் சூழல்பாதுகாப்பு அதிகாரசபைகுறிப்பிட்டுள்ளது.

கடல்சார்சூழல்பாதுகாப்பு அதிகார சபைவெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவைவருமாறு-

நீர்கொழும்பு பகுதியை அண்மித்த கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எம்-வி எக்ஸ்பிரஸ் பேர்ல் சரக்கு கப்பல் தொடர்பில் சமுத்திர மாசடைவு தடுப்பு சட்டத்தின் 26 ஆவது அத்தியாயத்தின் தண்டனைசட்டத்தின்பிரகாரம் கப்பல்உரிமையாளர்அல்லது கப்பலைஇயக்கியவர்அல்லது அந்த கப்பலின் இலங்கை பிரதிநிதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கான சகல தகவல்களும் சட்டமாதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதற்கமைய சட்டமா அதிபர் திணைக்களம் கப்பல் விபத்துதொடர்பில்தண்டனை சட்டகோவைக்கு அமைய உரிய தரப்பினருக்கு எதிராக நீதிமன்றத்தில்வழக்குதாக்கல் செய்துள்ளது.

இந்தக் கப்பல் விபத்தால் கடல் வளத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை மதிப்பீடுசெய்வதற்காக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையால் பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கிய வகையில்நியமிக்கப்பட்டகுழுவினர் சமர்ப்பித்த அறிக்கை சட்டமாதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எம்.வி எக்பிரஸ் பேர்ல் கப்பல் உரிமையாளர் நிறுவனத்திடமிருந்து நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆஸ்திரேலியநாட்டின்சட்டநிறுவனத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக அமைச்சரவைக்குயோசனை ஒன்று முன்வைக்கப்பட்டு சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்ய அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நிதி ஒத்துழைப்புக்களுக்காக அமைச்சரவை அனுமதியுடன் நிதி நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சிங்கப்பூர்நாட்டில்வழக்கு தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற அதிகாரம் உள்ளது என ஆஸ்திரேலிய நீதி நிறுவனம் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கப்பல் உரிமையாளர்உட்படபிரதான தரப்பினர் அனைவரும் சிங்கப்பூர் நாட்டில் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் சட்டமாதிபர் குறிப்பிட்டுள்ளார்.

கப்பல்நிறுவனம்ஐக்கிய இராச்சிய நீதிமன்றத்தில் நட்டஈடுவரையறைசெய்யும் வழக்கு நடவடிக்கையில் 19 ஆயிரம் மில்லியன் பவுன் நட்டத்தைவழங்கஉத்தரவை பெற்றுக்கொண்டுள்ளது. இந்த வழக்கு நடவடிக்கையில் கலந்துகொண்டு அந்த உத்தரவை மாற்றியமைக்க முதல்கட்டநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடல்சார் வளங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் துறைசார் நிபுணர்கள் முன்வைத்துள்ள மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக்கொண்டுசர்வதேச நிறுவனங்களின் இறுதி அறிக்கையை பெற்றுக் கொள்ள ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கப்பல்விபத்தால்சமுத்திர வளங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக் கொள்வதற்காக கடல்சார் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணக்கமாக செயற்படுகிறது.

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு

## ஊடகப் பேச்சாளர் தகவல்

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்புகருதிபொலிஸ்அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால்தல்துவ தெரிவித்துள்ளார்.



பண்டிகை காலத்தில் பல்வேறுமோசடிசம்பவங்கள் இடம்பெறலாம். எனவே இது தொடர்பாகப் பொதுமக்கள் அவதானமாக செயற்பட வேண்டும்எனஅவர்மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில் -

காலாவதியான பொருள்கள் கவர்ச்சிகரமான முறையில் குறைந்த விலைகளில் விநியோகிக்கப்படுகின்றன. இதில் கவனமாக இருக்க வேண்டும்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைமேற்கொள்ளும் குழுக்கள் மற்றும் நபர்கள் போலி நாணயத்தாள்களை புழக்கத்தில் விடுகின்றனர்.

மேலும் பொருட்கொள்வனவுக்கு அல்லது இதர தேவைகளுக்கு வெளியில் செல்பவர்கள் பெறுமதிமிக்க தங்கநகைகள் அணிவதைத் தவிர்த்து கொள்ள வேண்டும். பணப்பை உள்ளிட்ட பெறுமதி மிக்க பொருள்கள் தொடர்பாக அவதானமாக செயற்பட வேண்டும். ஏனெனில்பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை மேற்கொள்ளும் தரப்பினர் பொது இடங்களிலேயே அதிகம் சுற்றித் திரிகின்றனர்.

இதேவேளை, குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களைக் கண்காணிக்க அனைத்துபொலிஸ்நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களைக் கைது செய்துஅவர்களுக்குஎதிராகக் கடுமையான தண்டனை வழங்கப்படும்.

பொது மக்களின் பாதுகாப்பு கருதி நெரிசலான பகுதிகளில் பாதுகாப்பு பிரிவினர் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் குற்றப்புலனாய்வு பிரிவினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். சில பகுதிகளில் பொலிஸ் அதிகாரிகள் சாதாரண உடையில் இருக்கலாம்.

மேலும் சித்திரை புத்தாண்டுவிசேடவிழாக்களை ஏற்பாடு செய்பவர்கள் அதில் பங்கேற்பவர்களின் பாதுகாப்பையும் கவனித்துக் கொள்ளவேண்டும். அவற்றை பொலிஸ் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும். - என்றார்.

# தோட்டத் தொழிற்சாலையில் 30 லட்சம் ரூபா பணம் மாயம்

## முகாமையாளர் பொலிஸ் முறைப்பாடு

கம்பளைநகருக்குஅருகில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலையொன்றின் ஊழியர்களுக்கு வழங்குவதற்காக வைக்கபட்டிருந்த பணத்தில் சுமார் 30 லட்சம் ரூபா பணம் காணாமல் போயுள்ளதாக முகாமையாளரால்கம்பளைபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படிதொழிற்சாலை ஊழியர்களுக்கு சித்திரை புத்தாண்டு முற்பண கொடுப்பனவு கடந்த 08 ஆம் திகதியிலிருந்து கட்டம் கட்டாமாக சுமார் ஒரு கோடி ரூபா வரை வழங்கப்பட்டிருந்த நிலையில் மேலும் சில ஊழியர்களுக்கு வழங்குவதற்காக அலுவலகத்தின் லாச்சியில்வைக்கப்பட்டிருந்த 29 லட்சத்து 74 ஆயிரத்து முந்நூற்றி எண்பத்து ஒரு ரூபா பணமே காணாமல்போயுள்ளதாக10ஆம்திகதி செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையில் கண்காணிப்பு கெமரா பொருத்தப்பட்டிருந்த பொழுதும் அலுவலக அறை பகுதியில் கெமரா பொருத்தப்பட்டிருக்காமையால் விசாரணைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் இதேவேளை குறித்த தொழிற்சாலையில் இரவு நேரங்களிலும் ஊழியர்கள் வேலை செய்துவருவதால் பணத்தை வெளியிலிருந்து வந்து யாரும்திருடியிருக்கவாய்ப்பில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படிசம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# அதிக விலைக்கு முட்டை விற்ற வர்த்தகர்கள் மூவர் மீது வழக்கு



கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக ஹற்றன் நீதிவான் நீதிமன்றில்வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஹற்றன், கொட்டகலை மற்றும் நோர்வூட் பிரதேசங்களில் முட்டைகளை அதிக விலைக்கு வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர் எனத்தகவல் கிடைத்துள்ளது.

மேலும் வெள்ளை மற்றும்சிவப்பு முட்டைகளை 56 முதல் 60 ரூபா வரையிலான விலைகளில் விற்பனை செய்துள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபையின் நுவரெலியா மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மஸ்கெலியா மற்றும் கொட்டகலை நகரங்களில் உணவுப் பொருள்களை விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாமல் விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஊடக ஆளுமை மாணிக்கவாசகம்





இலங்கைத்தமிழ்ஊடகத் துறை ஆளுமைகளில் ஒருவரான மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் வவுனியாவில்காலமானார். என்றசெய்தி தமிழ்ஊடகத்துறையினருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

போர்க் காலத்திலும், போருக்குப்பிந்தியகாலத்திலும் கடுமையானஅச்சுறுத்தல்கள், உயிராபத்துக்களின் மத்தியிலும் உண்மைகளை வெளிக் கொண்டுவர வேண்டும் என்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் மாணிக்கவாசகம். மக்களின் அவலங்களை வெளிக்கொண்டு வருவதன் மூலமாக அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயற்பட்டவர் அவர்.

போர்தீவிரமாகஇடம்பெற்றுக்கொண்டிருந்த 1998ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவர் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறைச்சாலையில் விசாரணைகள் எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டார். இறுதியில் குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படாத நிலையில் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையாகியபின்னர் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காகச் சங்கமொன்றை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனைகளைக் கொண்டிருந்தவர்களில் அவரும் ஒருவராக இருந்தார். அத்துடன், குறித்த சிந்தனையை செயல் வடிவப்படுத்துவதில் ஏனைய ஊடகவியலாளர்களுடன் தோளோடுதோள் நின்று உழைத்தார். இதன் பயனாக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உருவாகியது.

அதில் இரு தடவைகள் தலைமைப் பதவியை ஏற்றிருந்த அவர் சிறப்பாகச் செயற்பட்டிருந்தமையும் வரலாறு.

வீரகேசரி, தினக்குரல், றொய்ட்டர்ஸ், பி.பி.சி. உள்ளிட்ட பல்வேறு உள்நாட்டு மற்றும்சர்வதேசசெய்திநிறுவனாங்களுக்கு தொடர்ந்து அறிக்கையிட்டு வந்திருந்த அவர், போர்க்காலம் உள்ளிட்ட விசேட நிலமைகளில் மிகவும் காத்திரமான ஊடகப்பணியை துணிச்சலாக ஆற்றியிருந்தார்.

பி.பி.சி. தமிழோசையில் போர்க் காலத்தில் தனது கணீரென்ற குரலில் அவர் வழங்கிய செய்திகள்தான் இன்றும் பலருக்கு நினைவிருக்கும்.

பத்திகள், கட்டுரைகள், விசேடகளஅறிக்கைகள்என்று பல்வேறு பேசவல்ல விடயங்களை வெளிக்கொண்டு வந்திருந்த இவர், ஊடகத் துறைக்கு அப்பால் பல்பரிமாணங்களைக் கொண்டவராகவும் திகழ்ந்தார்.

பாரம்பரிய பத்திரிகைத் துறையின் ஊடாக ஊடகத் துறைக்குள் பிரவேசித்த அவர், தொடர்ந்த தசாப்தங்களில் நவீன ஊடகங்களிலும் பணியாற்றிய பெருமையையும் ஒருங்கே கொண்டிருக்கின்றார். பல்வேறு சர்வதேசபயிற்சிகளைப்பெற்றுக் கற்றறிந்தவராக விளங்கிய அவர், இலங்கையில் பல பாகங்களிலும் இளம் ஊடகவியலாளர்களின் வளர்ச்சிக்காகப் பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்று கற்பித்தல்களை மேற்கொண்டதோடு, தனிப்பட்ட வகையிலும் வழிகாட்டியாகச் செயற்பட்டுள்ளார்.



ஊடகத்துறைக்கு அப்பால், மூன்று நூல்களையும் எழுதியிருக்கின்றார். கால அதிர்வுகள், வாழத்துடிக்கும் வன்னி, மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள் என்பன அவை. இவை அனைத்துமே போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களையும், போரால் பாதிக்கப்பட்ட மக்களுடைய நெருக்கடிகளையும் வெளிப்படுத்துபவை.



இதனைவிட “ நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்” என்ற தலைப்பில் நான்காவது நூலையும் அவர் எழுதியுள்ளார். இருந்த போதிலும் அதனை அவரால் அச்சடித்துவெளியிடவில்லைமுடியவில்லை. அதனையும் விரைவில் முடித்து வெளியிட வேண்டும் என்ற ஆதங்கம் அவருக்கு இருந்தது.

அவர் மறைந்தாலும் அவர்எழுதியநூல்கள்தொடர்து அவரது பெருமையைப் பேசிக்கொண்டிருக்கும்.

**- பாரதி -**

ஆறு மாத DSL உத்தரவாதத்துடன்

**Palma மின்கலங்கள்**

IT Power Backupக்காக

dsl We lead the way...!

PALMA

7Ah | 9 Ah | 20 Ah | 26 Ah | 42 Ah
65 Ah | 100 Ah | 150Ah | 200 Ah
ரூ.5,814 இருந்து

மின்சார தராசுகள் & பொம்மைகளுக்காக

6Ah | 12 Ah
ரூ.2,223 இருந்து

மின் மோட்டார் சைக்கிள்களுக்கான

12Ah | 20 Ah | 24 Ah | 28 Ah | 45 Ah
ரூ.13,252 இருந்து



Douglas & sons (pvt) ltd நான்கு தசாப்தங்களாக இலங்கை வாடிக்கையாளர்களின் வாகன மற்றும் பிற தேவைகளுக்காக சர்வதேச தரத்திலான பேட்டரிகளை இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

077 307 8799
070 163 0209




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.04.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 29 புதன்கிழமை 12.04.2023 கதிர் 26

## தனியார் பேருந்துகளும் 2 நாள்கள் சிறப்பு சேவை

தனியார் பேருந்துகள் 75 சதவீதமானவை இன்று இயக்கப்படுவதோடு நாளை 50 சதவீதமானவை இயக்கப்படுமென தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பண்டிகைக் காலத்தில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்களை நாம் எடுத்துள்ளோம். அதற்கு அமைய தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமானது அதிகளவிலான சேவைகளை இயக்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இன்றையதினம் தனியாருக்குச் 2

# பல்கலை ஆசிரியர் போராட்டம் ஏப். 17 முதல் தற்காலிக நிறுத்தம்

## ஆனால் விடைத்தாள் மதிப்பீட்டுக்குத் தொடர்ந்தும் மறுப்பு

பணிப்புறக்கணிப்பை கைவிட்டு, ஏப்ரல் 17 முதல் கற்பித்தல் செயற்பாடுகளை மீண்டும் தொடங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகவிரிவுரையாளர்சங்கங்களின் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவைத்தாண்டியும் நீண்டிருந்த நிலையிலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னஹெக்க இது தொடர்பில் தெரிவித்ததாவது:






எமது சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டம் நடைபெற்றது. ஆட்சியாளர்களின் செயற்பாடுகள், எமது அனுகுமுறைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தோம். அதன் முடிவில் தொழிற்சங்க நடவடிக்கைகையத் தற்காலிகமாகக் கைவிடத் தீர்மானித்துள்ளோம்.

அதநேரம், தெளிவான தீர்மானமொன்று கிடைக்கும்வரையில், உயர்தரப்பரீட்சைவிடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடப் போவதில்லை என்று ஏகமனதாக தீர்மானித்துள்ளோம் – என்றார்.

ஆட்சியாளர்களின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம், மார்ச் மாதம் 9ஆம் திகதி முதல், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. (02)

## சீனாவிற்கு குரங்குகள் ஏற்றுமதி

### சாத்தியங்களை ஆராய்கிறது விவசாய அமைச்சு

(ந.லோகதயாளன்)

இலங்கையில் விவசாய நடவடிக்கைகளுக்கும் தொல்லையாக மாறியுள்ள குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதிசெய்வதற்கானசாத்தியங்களைவிவசாயஅமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

இலங்கையிலுள்ள குரங்குகளை ஆய்வு செய்த சீனாஅவற்றிற்குத்தமதுநாட்டில் அதிககேள்விகாணப்படுவதாகக் கூறியுள்ளதாகக விவசாய அமைச்சு தெரிவிக்கின்றது.

இதையடுத்து, இலங்கையில் விவசாயச் செய்கைக்குப் ஆபத்தை விளைவிக்கும் வகையில் பெருகிப்போயுள்ளகுரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்ய முடியுமா என்று விவசாய அமைச்சு ஆராய்ந்தது வருகின்றது.

முதற்கட்டமாக இலங்கையில் இருந்து ஒரு லட்சம்குரங்குகளைசீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஆராயும் கூட்டம் ஒன்று செவ்வாய்க்கிழமைபத்தரமுல்லையில் உள்ள விவசாய அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடல்சாதகமாக அமைந்திருந்தது என்றும் எனினும் இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி பெற்று, குரங்குகளைஏற்றுமதி செய்வதற்குச் சட்டத்தில் இடமிருக்கின்றதா என்பதை ஆராய்வதற்காகக்குழுஒன்று நியமிக்கப்பட்டவேண்டும்என இந்தக்கூட்டத்தில்அமைச்சர் மகிந்தஅமரவீரதெரிவித்தார். அதற்கானநடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இலங்கையில் குரங்குகளின் எண்ணிக்கை கடுமையாகஅதிகரித்துள்ளது. இதையடுத்து அவற்றை அண்மையில் ஆட்சியாளர்கள் பாதுகாக்கப்பட்ட வனவிலங்குகள் பட்டியலில் இருந்து நீக்கினர்.

நாட்டில் உள்ள 25 மாவட்டங்களில்21மாவட்டங்களில் குரங்குகளால் விவசாயம் கடுமையாகப்பாதிக்கப்படுவதாக விவசாயிகள் முறைப்பாடு செய்து வருகின்றனர். பல சமயங்களில் பொது மக்களும் குரங்குகளால் கடிக்கப்படுவது உட்பட பல அசௌகரியங்களைச் எதிர்கொண்டு வருகின்றனர்.

## நொச்சிகுளம் அம்மனை வழிபடவும் தொல்லியல் திணைக்களம் தடை

### பொங்கலிடச் சென்றவர்களை எச்சரித்துத் திருப்பியனுப்பியது

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி நொச்சிக்குளம் அம்மன் ஆலயத்தில் பொங்கல்விழாசெய்வதற்கும் தொல்லியல் திணைக்களம் தடை விதித்துள்ளது.

தொண்மையான சைவ ஆலயங்களில் வழிபாடு இயற்றுவதற்குத் தொல்லியல்த் திணைக்களம் தடை ஏற்படுத்தி வரும் தொடரில் இறுதியாக இந்தத் தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டம் நெடுங்கேணியில் அமைந்துள்ளது நொச்சிக்குளம் அம்மன் ஆலயம். அந்தப் பகுதியில் தொல்லியல் அடையாளங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கும் தொல்லியல் திணைக்களம், அங்கு மக்கள் தமது வழக்கமான வழிபாடு மற்றும் பொங்கல் இடுவதற்குத் தடை விதித்துள்ளது.

பங்குனித் திங்களை முன்னிட்டு அங்கு பொங்கலிடச் சென்றவர்களைத் தொல்லியல் திணைக்களம் திருப்பியனுப்பியுள்ளது.

திங்கள் கிழமை ஆலயத்திற்குச் சென்ற பலர் அங்கு பொங்கல் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கானஆயத்தங்களைச் செய்தனர். அப்போது அந்த இடத்திற்கு வந்த தொல்லியல்த்திணைக்களத்தினர்ஆலய சூழல் தொல்லியல் சின்னம் என்பதனால் இங்கே பொங்க முடியாது, அனைத் தையும் எடுத்துக்கொண்டு வெளியேறுங்கள் என்று எச்சரித்து அவர்களை வெளியேற்றினர்.

இதனால் பங்குனி உற்சவத்திற்குச் சென்ற பக்தர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

ஏற்கனவே குருந்தூர் மலை மற்றும் வெடுக்குநாறி மலை என்பவற்றில் சைவக் கடவுள்களை வழிபடுவதற்கு தொல்லியல் திணைக்களத்தினர்தடைஏற்படுத்தியிருக்கும் நிலையில் தற்போது நொச்சிகுளம் அம்மனை வழிபடவும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.



## புத்தாண்டுத் தினத்துக்காக கூடுதல் பேருந்து சேவைகள்

தமிழ்–சிங்களபுத்தாண்டை முன்னிட்டு தமது சொந்தப் பிரதேசங்களுக்குச் செல்லும் மக்களுக்கானவிசேட போக்குவரத்துச் சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி நாளாந்தம் இயங்கும் இ.போ.ச. பேருந்து சேவைகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக 300 சேவைகள் இன்று முதல் சேர்க்கப்பட்டுள் என என்று இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

இந்த விசேட போக்குவரத்துச் சேவைகள் ஏப்ரல் 18 வரையில் இயங்கும் என்றும், புத்தாண்டு தினத்தன்று பயணிகளின் தேவைக்கு ஏற்ப பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார். (02)

## ஆளும் தரப்புக்குள் பிளவுகள் அதிகரிப்பு

### பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவிப்பு

ஆளும் தரப்பிற்குள் பிளவுகள் அதிகரித்து வருவதாகசுதந்திரமக்கள்சபையின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

அவருடைய கட்சியின் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும் கட்சிக்குள் மெல்லமெல்ல விரிசல்கள் எழுத் தொடங்கியுள்ளன. ஜனாதிபதி தேர்தல் தொடர்பில்கருத்துக்கள்வெளிப்படத் தொடங்கிய நிலையில்தான் அவ்விதமான நிலைமைகள் தோன்றியுள்ளன.

சிலருக்கு ஜனாதிபதி ரணிலை பிடிக்கின்றது. பலருக்குப் பிடிக்கவில்லை. பிடிக்காதவர்கள் விமர்சிக்கின்றார்கள். ரணிலை பிடிக்கும் என்ற அமைச்சர் இருவர்கூட விமர்சிக்கின்றார்கள். இந்த நிலைமைகள் இன்னமும் நீடிக்கப்போகின்றன.

தற்போதைய நிலைமையில், ஜனாதிபதித் தேர்தல் இன்னமும் 13 மாதங்களின் பின்னர் தான் அறிவிக்கப்படவுள்ளது. குறிப்பாக, அடுத்த ஆண்டு ஏப்ரலில்தான் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்படலாம்.

அதன் பின்னர் பரப்புரைகள் நடத்தப்படவுள்ளன.

ஆனால், அதற்குள் எவ்வாறு நிலைமைகள் மாறும் என்று யாரும் சிந்திக்கவில்லை.

தற்போதைய தலைவர்கள் நாட்டைத் தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசமாக கருத்துகின்றார்கள். ஆனால்நாட்டில்பல மாற்றங்கள்நிகழ்ந்துவிட்டன. ஆகவே நிகழப்போகும் மாற்றங்களையும் அவதானித்து மக்களை தெளிவுபடுத்துவோம் - என்றார்.

## பரந்தன் ரயில் நிலையத்துக்குள் புகுந்து குண்டர்கள் வெறியாட்டம்

### ரயில் நிலைய அதிபர் உட்பட ஊழியர்கள் இருவர் படுகாயம்







கிளிநொச்சிபொலிஸ்பிரிவுக்குட்பட்ட பரந்தன் ரயில் நிலையத் துக்குள் புகுந்த குண்டர்கள் நடத்திய தாக்குதலில் ரயில் நிலைய அதிபர் உட்பட ஊழியர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளதுடன் உடமைகளும் சேதமடைந்துள்ளன.

பரந்தன் ரயில் நிலையப் பகுதியில் நேற்றிரவு மதுபானம்அருந்தியகுழுவினரிடம் அப்பகுதியில் மது பானம் அருந்த வேண்டாம் என்று ஊழியர்களால் கூறப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்தகுண்டர்கும்பல்பரந்தன் ரயில்நிலையஊழியர்களைத் தாக்கிக் காயப்படுத்தியதுடன், ரயில் நிலைய உடைமைகளையும்சேதப்படுத்தியுள்ளனர். சந்தேகநபர்களைக்கைதுசெய்ய விசேடபொலிஸ்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில்படுகாயமடைந்தரயில் நிலைய அதிபர்உட்பட இருவர் கிளிநொச்சிவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (02)

## கப்பலில் தப்ப முயன்ற தமிழர்கள் மறியலில்

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த அமெரிக்க கப்பலுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து, வெளிநாடு செல்ல முயற்சித்த நிலையில் கைது செய்யப்பட்ட வடக்கைச் சேர்ந்த 4 இளைஞர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு அருகாகச் செல்லும் மற்றொரு கப்பலில் திருப்பியனுப்பப்பட்ட 4 இளைஞர்களையும் கடலில் வைத்துப் பெறுப்பேற்ற குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளும் குற்றப புலனாய்வுத் திணைக்களத்தினரும் அவர்களைப் பதில் நீதிவான் பிரேமரத்ன திரானகமவிடம் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது, அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த 25 வயது முதல் 32 வயதுக்கு இடைப்பட்ட நான்கு இளைஞர்களே இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த அமெரிக்க கப்பல் கடந்த மாதம் 24ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததுடன், அது மறுநாள் ஐரோப்பா நோக்கிப் பயணத்தைத் தொடங்கியிருந்தது.

பின்னர், சுயஸ் கால்வாயில் நுழையும்போது, கப்பலில் பணியாளர்கள் முன்னர் அறிந்திராத நான்கு பேர் இருப்பதைக் கண்டு, தங்களது நிறுவனத்துக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, கடந்த மாதம் 28ஆம் திகதி குறித்த இளைஞர்களின் அடையாள அட்டைகளைப் 2

# ஈஸ்டர் தாக்குதலைச் செய்வித்தவர்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு



(அகீல்)

ஈஸ்டர் தாக்குதல் நடந்து நான்கு வருடங்களாகி விட்டன. ஆனாலும் இதனைச் செய்தவர்கள் தவிர செய்வித்தவர்கள் யார் என்பது இன்னமும் சரியாக கண்டுபிடிக்கப்படவில்லை.

இவ்வாறு ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீட் தெரிவித்துள்ளார் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொடக்கத்தில் தவ்ஹீத் கொள்கையால் உந்தப்பட்டவர்கள் திட்டமிட்டு தற்கொலை தாக்குதல் நடத்தியதாகவே முழு உலகும் நம்பியது. ஆனாலும் இந்தளவுக்கு தற்கொலை குண்டுகளை உருவாக்கும் அளவுக்கு இலங்கை முஸ்லிம்களுக்கு மூளை இல்லை என்ற சந்தேகமும் இருந்தது. இவ்வாறான தற்கொலை குண்டுகளை உருவாக்கும் ஆற்றல் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமே உண்டு.

இந்தப்பின்னணியில் இதில் ஈடுபட்ட ஸஹ்ரான் என்பவர் தவ்ஹீத் பெயரில் உள்ள இயக்கத்தின் தலைவர் என்பதால் தவ்ஹீத் பரப்புரைதான் இப்படியான தற்கொலை தாக்குதலுக்கு காரணம் என ஊடகங்கள் மூலம் சொல்லப்பட்டதுடன் தவ்ஹீத் ஜமாஅத்துக்கள் தடை செய்யப்பட வேண்டும் என இலங்கை முஸ்லிம்களில் பலர் அன்றைய நல்லாட்சி அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர்.

தவ்ஹீத்வாதிகள் உலக மகா கோழைகள் என்றும் அவர்களால் இந்தளவுக்கு முடியாது என்றும் தவ்ஹீத்வாதிகள் தமக்குள்ளும் முஸ்லிம் சமூகத்துக்குள்ளும் மோதிக்கொள்வதில்தான் வீரர்கள் என்றும் இதன் பின்னால் மறைகரங்கள் உள்ளன என்றும் நாம் கூறினோம். யாருமே கேட்கவில்லை.

அதைத் தொடர்ந்து கோட்டாபய ஆட்சிக்கு வந்தபோது ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணம் அள்ளாஹ்தான் என ஞானசார தேரர் முட்டாள்தனமாக ஒரு போடு போட்டார்.

அதேபோல் தவ்ஹீதின் மீதும் பழி போட்டார். அதைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ தவ்ஹீத் ஜமாஅத்துக்களையும் தவ்ஹீத் அல்லாத சில ஜமாஅத்துக்களையும் தடை செய்தார். இதை தவ்ஹீத் அல்லாத முஸ்லிம்கள் பெரிதும் வரவேற்றனர்.

சிலர் இதற்காக ஞானசார தேரரை பெரிய அவுலியா போல் வரவேற்றனர். அவரிடம் சென்று இன்னும் கொஞ்சம் மூட்டியும் விட்டனர். ஆனாலும் நடுநிலை முஸ்லிம்கள் பொறுமை காத்ததுடன் இறைவனிடம் பாரப்படுத்தினர்.

முஸ்லிம்கள் அவமானப்பட்டுப் போயிருந்த இந்தச் சந்தர்ப்பத்தில் ஞானசார போன்ற இனவாதிகளையும் ஐரோப்பிய பணத்துக்கு அலையும் சில முஸ்லிம் பெண்களையும், அமைப்புக்களையும் திருப்திப்படுத்த முஸ்லிம் திருமண சட்டத்தை திருத்தும் நோக்கில் ஞானசாரவின் தலைமையில் ஒரே சட்டம் என்ற ஆணைக்குழுவை நியமித்தார் கோட்டாபய. இதில் தவ்ஹீத் எதிர்ப்பு முஸ்லிம்களையும் உறுப்பினராக்கினார். இதன் மூலம் ஞானசாரவுக்கு எலும்புத்துண்டு வழங்கப்பட்டு அதிலேயே அவரை ஈடுபடுத்தியதால் அவர் வேறு விசயங்கள் பேசுவதில் இருந்து ஒதுங்கிய நல்ல சூழலும் ஏற்பட்டது. அத்துடன் கோட்டா ஆட்சிக்கு ஒத்துழைத்த நாம் சொல்லியும் கேளாமல் இனவாத சுகாதார அலுவலர்கள் மற்றும் சில தேரர்களின் முட்டாள்த்தனமான பேச்சைக்கேட்டு கொரோனா ஜனஸாக்களை எரித்தார் கோட்டாபய. இது விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷ போன்ற அரசியல்வாதிகளின் அறிவுரைகளையும் அவர் கேட்கவில்லை. இது பெரும் தவறு என்பதை நாம் அரசுக்கு சுட்டிக்காட்டத் தவறவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ இப்படியான முஸ்லிம் எதிர்ப்பு வேலைகளைத்தான் பார்த்தாரே தவிர நாட்டை வளப்படுத்த முயலவில்லை. இதனால் அவர் நாட்டை விட்டு ஓடும் கேவலமான நிலை ஏற்பட்டது.

இப்போது ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணம் பிள்ளையான் மற்றும் கோட்டாபாய உட்பட படையினர் சிலர் எனப் பிள்ளையானின் செயலாளராக நீண்ட காலம் இருந்த மருதமுனையைச் சேர்ந்த ஆஸாத் மௌலானா என்பவர் வெளிநாட்டுக்கு ஓடிச்சென்று அங்கிருந்து சொல்லியுள்ளார். அத்துடன் இது தற்கொலை தாக்குதல் அல்ல ரிமோட் கன்ட்ரோல் தாக்குதல் என்றும் கூறியுள்ளார். அதாவது குண்டை வைத்துவிட்டு வந்தால்போதும் என்றே முஸ்லிம் வாலிபர்கள் சொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் குண்டை கொண்டு சென்று வைக்கும் முன் வெளியில் இருந்து ரிமோட் கன்ட்ரோலில் இயக்கியதாக மௌலானா கூறியுள்ளார். அப்படியாயின் இது தற்கொலை தாக்குதல் அல்ல, திட்டமிடப்பட்ட குண்டுத்தாக்குதல் என்பதைப் புரியலாம்.

இவர் உண்மை பேசுகிறாரா அல்லது தஞ்சம் புகுந்துள்ள நாட்டில் ராஜபக்ஷாக்களுக்கு எதிரான புலம் பெயர் தமிழர்களின் நன்மதிப்பை பெற இப்படிச் சொல்கிறாரா என்பது தெரியவில்லை. ஆனாலும் இக்குற்றச்சாட்டுக்கு இன்றுவரை பிள்ளையானோ கோட்டாவோ பதில் தந்ததாகக் காணவில்லை.

ஸஹ்ரான் கோஷ்டியை தயார் படுத்தியதில் கோட்டாவுக்கும் படையினர் சிலருக்கும் சம்பந்தம் உண்டா என்பது இன்னமும் நிரூபிக்கப்படாவிட்டாலும் அது பற்றி ஆராயும் கடமை அரசுக்குள்ளது.

இந்த நிலையில் குண்டுவெடிப்பின் முக்கிய சூத்திரதாரி என ஊடகங்களால் சொல்லப்பட்ட புலஸ்தினி சாரா காணாமல் போய் இப்போது அவரும் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார் என அரசு கூறியுள்ளது. புலஸ்தினியை இயக்கியது இந்தியாவின் றோ என சில ஊடகங்கள் சொன்னாலும் அதுவும் இன்னமும் நிரூபிக்கப்பட்டதாக தெரியவில்லை.

கூட்டிக்கழித்து பார்க்கும் போது இக்குண்டு வெடிப்பு தற்கொலை தாக்குதல் அல்ல, மாறாக பலர் சேர்ந்து திட்டமிட்ட குண்டுத் தாக்குதல் என்பது தெரிகிறது.

ஆக மொத்தத்தில் இக்குண்டு வெடிப் பில் சம்பந்தப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டு விட்டதாகவே தெரிவதால் இதன் பின்னணியில் யார் இருந்து இயக்கினார்கள் என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. மர்மம் துலக்கப்பட்டு உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே நாட்டின் அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது - என்றுள்ளது.

---

### கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாருக்கான

# போசாக்கு ஆரோக்கியத் திட்டம் கல்முனையில் நேற்று தொடக்கம்





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனையில் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போஷாக்கு மட்டத்தை மேம்படுத்தி, ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம் செவ்வாய்க்கிழமை தொடங்கப்பட்டது. மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸின் பணிப்புரைக்கமைய கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் வழிகாட்டலில் மருதமுனை சமூர்த்தி வங்கியில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றது. சமூர்த்தி வங்கியின் முகாமையாளர் ஏ.எல்.எம். நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கர்ப்பிணித் தாய்மாருக்கு குடும்பநல உத்தியோகத்தர்களினால் போசாக்கு பற்றிய ஆலோசனைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் என்.எம்.யு.சத்தார், பிரதித் தலைவர் எம்.ஐ. எம்.சாஹிர் ஆகியோரும் கலந்துகொண்டனர். சமூர்த்தி வங்கியின் முகாமையாளர் ஏ.எல். எம். நஜீம் கர்ப்பிணித் தாய்மாருக்கான பத்தாயிரம் ரூபாய் கொடுப்பனவுகளை வழங்கி வைத்தார். 264 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 264,000 கொடுப்பனவாக வழங்கி வைக்கப்பட்டது.

---

# மாற்றுத்திறனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள்



(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் செவ்வாய்க்கிழமை அல்ஹிக்மா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகளை ரெக்டோ நிறுவனத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன், ரெக்டோ நிறுவனத்தினர், கிராம சேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

---

## கப்பலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதித்த போது அவர்கள் இலங்கையர்கள் எனக் கப்பலின் பணிக்-குழாமினர் உறுதிப்படுத்தி இலங்கைக்கு அருகில் பயணிக்கவிருந்த மற்றுமொரு கப்பலிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

பின்னர் நேற்றுமுன்தினம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் வழங்கிய அறிவித்தலின்படி, கடற்படை, பொலிஸ் மற்றும் துறைமுகங்கள் அதிகார சபை ஆகியவற்றின் அதிகாரிகள் குழுவொன்று விசேட படகொன்றில் குறித்த கப்பலுக்குச் சென்று அவர்களைக் கைது செய்திருந்தனர்.

அதன்பின்னர் குறித்த 4 தமிழ் இளைஞர்களும் மேலதிக விசாரணைகளுக்காகக் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இந்தநிலையிலேயே அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (02)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தமான பஸ்கள் 75சதவீதமானவை இயங்கவுள்ளன. அதில் குறுந்தூர மற்றும் நெடுந்தூர பஸ்களும் உள்ளடங்கும். நாளைய தினம் 50 சதவீதமானவை இயங்கவுள்ளதோடு 14ஆம் திகதி மிகக்குறைந்த அளவில்தான் பஸ்கள் இயக்கப்படவுள்ளன.

ஏப்ரல் 15 கால்வாசித் தனியார் பேருந்துகளே இயக்கப்படும். ஏப்ரல் 16 மீண்டும் நெடுந்தூர சேவைகள் இயக்கப்படவுள்ளன. குறித்த தினம் குறுந்தூர பேருந்து சேவைகள் சொற்ப அளவில்தான் இயங்கப்படவுள்ளன - என்றார்

---

# மூத்த ஊடகவியலாளர் மாணிக்கவாசகம் மறைவு



வவுனியாவைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் இன்று அதிகாலை இயற்கையெய்தினார்.

பி.மாணிக்கவாசகம் என அறியப்படும் அவர் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களுக்குச் செய்தியாளராகப் பணிபுரிந்துள்ளார்.

பல் பரிமாணங்களைக் கொண்ட இவர் கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், நூல்கள் என்பவற்றையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது உட்பட பல்வேறு விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியா, வைரவப்புளியங்குளம் 10 ஆம் ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தொடங்கும் என்றும், காலை 9 மணிக்கு தட்சனாங்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் என்றும் அன்னாரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

நெருக்கடியான காலகட்டங்களில் குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற போர் குறித்து செய்திகளை பிபிசி தமிழ் ஓசை மூலமாக உலகிற்கு வெளிப்படுத்தி வந்தவர் மாணிக்கவாசகம். 01.04. 2023 அன்று தனது 76 ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடியிருந்தார்.

அண்மைக் காலமாக அவர் நோய் வாய்ப்பட்டிருந்தார்.

---

# இரு தரப்பு மோதலில் கணவன் படுகொலை; மனைவி படுகாயம்

இரு தரப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டதில் கணவன் உயிரிழந்துள்ளதுடன் அவரின் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல், பிங்கிரிய பகுதியில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிங்கிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகொல்லாகம பிரதேசத்தில் நபர் ஒருவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

உயிரிழந்தவர் 52 வயதுடைய வல்லவ, நாகொல்லாகம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 41 வய-துடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (02)

# யாழ்ப்பாணப் பல்கலையில் அன்னைபூபதி நினைவேந்தல்






இந்தியப் படைகளால் தமிழர் தாயகத்தில் வலிந்து திணிக்கப்பட்ட போரையும் அடாவடிகளையும் நிறுத்த வலியுறுத்தி மட்டக்களப்பு மண்ணில் உணவு தவிர்ப்பு அறப்போர் புரிந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவேந்தல் இன்று யாழ்ப்பாணப் பல்கலைமாணவர்களால்உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நினைவேந்தலில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார், கலைப்பீட மாணவர்ஒன்றியத்தலைவர்சி.ஜெல்சின், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் அபிரக்சன், மற்றும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத் தலைவர் த.சிவரூபன் உள்ளிட்டோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் நினைவேந்தலில் கலந்து கொண்டனர்.

## தமிழ்ப் புத்தாண்டையொட்டி 300 குடும்பங்களுக்கு உதவி



தமிழ் சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இரண்டாம் கட்டமாக 300 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வைற்ரோல் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்பில் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்கள், வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் என தேவைப்பாடுடைய 300 குடும்பங்களுக்கு தலா 5,300 ரூபாய் பெறுமதி கொண்ட உலருணவுப் பொதிகள் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டன.

## நிறைமாத கர்ப்பிணி மனைவிக்கு இடியனால் வெடிவைத்த கணவன்

### அக்கராயனில் சம்பவம்

கர்ப்பிணியான மனைவியை இடியன் துப்பாக்கியால் சுட்டார் என்ற குற்றச்சாட்டில் கணவனைத் தாம் கைது செய்திருக்கிறார்கள் என்று அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரையானில் செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குடும்பத் தகராறில் கோபமடைந்த கணவன் இடியன் எனப்படும் உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கியை எடுத்து மனைவியின்காலில்சுட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தகர்ப்பிணி மனைவி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

அவர் நிறைமாதக் கர்ப்பிணி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இடியன் துப்பாக்கியை வைத்திருந்தமை மற்றும் அதைக் கொண்டு சுட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கணவனைக் கைது செய்துள்ள பொலிஸார் அவர் மீது வழக் குப் பதிவு செய்துள்ளனர்.

## கிளிநொச்சி அபிவிருத்திக் குழு அலுவலகம் இன்று காலை திறப்பு

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இன்று காலை 10.30 மணிக்கு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வு, கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அதிதியாக கலந்து கொண்டு, நாடாவை வெட்டி அலுவலகத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவராக தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிகச்செயலர் க. ஸ்ரீமோகனன், மேலதிகச் செயலர் (காணி) திருலிங்கநாதன், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளர் வை.தவநாதன், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் மேலதிக இணைப்பாளர் கோ. றூாங்கன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# வரவேற்கக்கூடிய திட்டம்தான்

சீனாவிற்கு குரங்களை ஏற்றுமதி செய்வதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் திட்டமிடுவது தொடர்பில் வெளியான செய்திகள் பார்த்தவுடன் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சீனர்கள் ஊர்வன, நடப்பன என்று பலவற்றையும் விரும்பி உண்ணும் பழக்கமுள்ளவர்கள். பூச்சி, புழுக்கள், பாம்புகள், தவளைகள் என்று எல்லாவற்றின் மீதும் விருப்புக் கொண்டவர்கள். மட்டுமல்ல இங்குள்ள கோழிப் பண்ணைகள், ஆட்டுப் பண்ணைகள் போன்று அவற்றையும் பண்ணை வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்து உண்ணக்கூடியவர்கள். அவர்களுக்குக் குரங்குகளை ஏற்றுமதி செய்வதென்பது அவர்களின் உணவுக்கானதாக இருக்குமோ என்கிற அச்சம் உடனடியாக எழுவதும் அதன் பால் அதிர்ச்சி ஏற்படுவதும் இயல்பானதுதான்.

இருப்பினும் நிம்மதி தரக்கூடிய விடயம், சீனாவில் உள்ள உயிரியல் பூங்காக்களில் வளர்ப்பதற்காகவே குரங்குகளைத் தரும்படி அந்த நாடு கோரிக்கை விடுத்திருப்பதாக விவசாய அமைச்சு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். தமது நாட்டு உயிரியல் பூங்காக்களின் தேவைக்காக இலங்கையின் சிறுவன் குரங்குகள் (முகம் சிவத்த சிறு குரங்குகள்) ஒரு லட்சத்தை முதற்கட்டமாகத் தருமாறு சீனக் குழு ஒன்று விவசாய அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது என்று அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் தர்ம வன்னியநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இலங்கை குரங்குகளின் எண்ணிக்கைப் பெருக்கத்தால் பெரும் தொல்லையை அனுபவித்துவரும் நிலையில் சீனர்களின் இந்தக் கோரிக்கை அதற்கு வரப்பிரசாதமாகத் தெரிவதில் தவறில்லை. தற்போதைய நிலையில் இலங்கையில் 30 லட்சத்துக்கும் சிறுவன் குரங்குகள் உள்ளனர் ரெங்கடர் கொப்பேக்கடுவ விவசாயப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளில் உறுதிப்படுத்தியுள்ளது. நாட்டில் உள்ள 25 மாவட்டங்களில் 21 மாவட்டங்களில் இந்தக் குரங்குகளால் விவசாயத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாகப் பாதுகாக்கப்பட்டவன உயிரினங்களின் பட்டியலில் இருந்து இந்தக் குரங்குகள் நீக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுடனான சந்திப்பு ஒன்றில் தொல்லை அதிகமாக இருந்தால் குரங்குகளைச் சுட்டுக்கொல்லும்படி விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்திருந்தார். அதைத் தவிர வேறு எந்தத் தெரிவும் இல்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

கொப்பேக்கடுவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுப்படி 250 விவசாயப் பகுதிகளில் 110 பகுதிகள் சிறுவன் குரங்குகளால் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக சிறுதானியப் பயிர்ச்செய்கையை விவசாயிகள் முற்றிலுமாகக் கைவிட்டதற்கு குரங்குகள், மயில்கள், அணில்கள் என்பனவே காரணமாக இருந்தன என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

காடுகளைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தாலும் சிறுவன் குரங்குகள் தற்போது நகரங்களிலும் கிராமங்களிலும் அதிகளவில் வாழக் கற்றுக்கொண்டுள்ளன. 1956 முதல் 1993 வரையில் மேற்கொள்ளப்பட்ட விவசாயத்திற்கான காடழிப்புக்காரணமாக இந்தக் குரங்குகள் தமது காட்டு வாழ்க்கையைத் தொலைத்துவிட்டன என்று கூறப்படுகின்றது. இருப்பினும் இவற்றின் பெருக்கம் எதிர்காலத்திலும் விவசாயத்திற்குப் பேரழிவாக இருக்கும் என்பதால் அவற்றைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியம் ஆட்சியாளர்களுக்கு இருக்கின்றது.

அத்தகைய நிலையில்தான் சீனர்களின் கோரிக்கை அரசிடம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அதனை உடனடியாகப் பரிசீலிப்பது என்கிற முடிவுக்கும் ஆட்சியாளர்கள் வந்திருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. குரங்குகள் சீனர்களின் உணவுக்காகக் கொல்லப்படாது என்கிற வகையில் அவற்றை இலங்கையில் கொன்று அழிக்காமல் சீனாவிற்கு ஏற்றுவது சிறந்த நடவடிக்கையாகத்தான் இருக்கமுடியும். நாட்டின் விவசாய எதிர்காலத்தைப் பாதுகாப்பதுடன் உலகின் உயிர்ப் பல்வகைமையினைப் பாதுகாக்கவும் இந்தத் திட்டம் உதவும் என்பதால் ஆட்சியாளர்கள் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதை வரவேற்கலாம்.

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த தொடர்ந்தும் ஆதரவளிப்போம்

## உலக வங்கி உறுதியளிப்பு

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.

2023 வசந்த கால கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இலங்கையை பிரதிநிதித்துவம் செய்து நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வொஷிங்டனுக்கு சென்றுள்ளார்.

இதன்போது உலக வங்கி குழுமம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவ பணிப்பாளர் அன்னா பிஜெர்டேவை சந்தித்து கலந்துரையாடினார்.

அவருடன் இலங்கையின் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார மீட்சிக்கான அதன் நன்மைகள் தொடர்பாக கலந்துரையாடியதாக இராஜாங்க அமைச்சர் ஹொான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்போது சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த உலக வங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என அவர் உறுதியளித்ததாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுடனும் நிதி இராஜாங்க அமைச்சர் ஹொான் சேமசிங்க கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கான நாட்டின் அர்ப்பணிப்பு தொடர்பாகப் பேசியதாக ஹொான் சேமசிங்க கூறினார்.

# மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பில் கம்மன்பில கருத்து முற்றிலும் பொய்!

## அடித்துக் கூறுகிறார் சபாநாயகர்

மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்த கருத்து முற்றிலும் பொய்யானது என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கருத்துக்கள் நாட்டின் நீதித்துறையை தவறாக வழிநடத்தும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை பொறுப்பான சபை உறுப்பினர் என்ற வகையில் உதய கம்மன்பில செவிமடுத்திருக்க வேண்டும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

யாரோ ஒருவரின் அறிக்கையை தவறாக சித்திரித்து குறுகிய அரசியல் இலக்குகளை அடைய பொதுமக்களை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுமக்களை தவறாக வழிநடத்த உதய கம்மன்பில மேற்கொண்ட கீழ்த்தரமான முயற்சி தொடர்பாகவும் சபா நாயகர் கண்டனமும் தெரிவித்துள்ளார்.



# கடன் மறுசீரமைப்பு ஜூன் மாதம் நிறைவு

## கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி நம்பிக்கை



இலங்கையின் உள்ளக மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமார சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின் மீளாய்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. இந் நிலையில் அதற்கு முன்னர் மறுசீரமைப்புப் பணி களை முடிக்க முடியும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளு நர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இணையத்தள கலந்துரை யாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# பொது நிறுவனங்கள் மறுசீரமைப்பு அவற்றை விற்பனை செய்வதல்ல!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறுகிறார்



பொது நிறுவனங்களை மறுசீரமைப்பது என்பது அவற்றை விற்பனை செய்வதல்ல என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மறுசீரமைப்பு மூலம் ஏகபோகத்தை குறைத்து மக்களுக்கு சேவைகளை வினைத்திறனுடன் வழங்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கோழி இறைச்சி விலை மேலும் அதிகரிக்கலாம்?

சந்தையில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கலாம் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி ஆயிரத்து 350 ரூபாவை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும், பண்டிகை காலம் என்பதால் சந்தையில் கோழி இறைச்சிக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# புத்தாண்டுக்கு மரக்கன்றுகளை நடுமாறு சுற்றுச்சூழல் அதிகார சபை கோரிக்கை

புத்தாண்டினை முன்னிட்டு ஒரு செடியை நட்டு, சுற்றுச்சூழலுக்கு பங்களிக்குமாறு சுற்றுச்சூழல் அதிகார சபை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தத்திட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் அமுலில் இருக்கும் என சுற்றுச்சூழல் அதிகார சபை அறிவித்துள்ளது.

அதன்படி, மருத்துவ செடிகள், பழ மரங்கள் என்பவற்றை நாட்டி இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை சுற்றுச்சூழல் அதிகார சபை அனுப்பலாம்.

011 2 87 23 59 அல்லது 011 2 87 22 78 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மரங்களை நட்டு ஓராண்டு நிறைவடைந்த நிலையில் கணக்கெடுப்பு நடத்தி, மரங்களை முறையாக நட்டு பராமரித் தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

# மக்களை ஏமாற்றும் பிரசாரத்தை அரசாங்கம் மேற்கொள்கின்றது

## முஜிபுர் ரஹ்மான் சாடல்



அரசாங்கம் பொதுமக்களை ஏமாற்றும் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாக கொழும்பு மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் சேர முயற்சிக்கின்றனர் என ஆளும்கட்சி உறுப்பினர்கள் பலர் கூறுகின்றமையில் உண்மையில்லை என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பிலான சர்ச்சைகளும், மத்திய வங்கி தொடர்பான சட்டமூலம் குறித்த குற்றச்சாட்டுகள் அரசாங்கம் நெருக்கடியில் உள்ளதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. - என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் 54 நாடாளுமன்ற உறுப்பினர்களில் நான்கு பேர் இதுவரை ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

டயானாகமகே, ஹரின்பெர்னாண்டோ, மனு நாணயக்கார மற்றும் அரவிந்த் குமார் ஆகியோர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.